# வருடாந்த முன்னேற்ற அறிக்கை - 2011



## தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

த.பெ. இல. 14, பேராதனை

# தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

# வருடாந்த முன்னேற்ற அறிக்கை

# 2011

**தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்**

**த.பெ.இல. 14, பேராதனை**


# உள்ளடக்கம்


| | |
|---|---|
| எமது முன்னேற்றம் ஒரே பார்வையில் | பக்கம் 01 |
| அறிமுகம் | பக்கம் 03 |
| சாதனைகள் | பக்கம் 07 |
| அரச தாவரவியல் பூங்கா | பக்கம் 13 |
| பூச்செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகு | பக்கம் 21 |
| தேசிய தாவரக்கயம் | பக்கம் 36 |
| ஹக்கல தாவரவியல் பூங்கா | பக்கம் 45 |
| கம்பஹா தாவரவியல் பூங்கா | பக்கம் 51 |
| மூலிகைத் தாவரப் பூங்கா – கனேவத்த | பக்கம் 57 |
| உலர் வலய தாவரவியல் பூங்கா – அம்பாந்தோட்டை | பக்கம் 60 |
| ஈரவலய தாவரவியல் பூங்கா – அவிசாவலை | பக்கம் 64 |
| அதிமேதகு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரது வாசஸ்தலங்களின் பூங்காக்கள் | பக்கம் 68 |
| பொதுநலவாய போர் சமாதிகள் | பக்கம் 69 |
| 2011ம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் | பக்கம் 70 |
| 2011 ம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் | பக்கம் 71 |

**எமது முன்னேற்றம் ஒரே பார்வையில்**


**2011ன் வருமானம்**

- நுழைவுக் கட்டணம், தாவர விற்பனை மற்றும் வாடகைகள் மூலம் ரூபா 353.4 மில்லியன்கள் மொத்த இலாபமாக பெறப்பட்டது. முன்னைய வருடத்தோடு ஒப்பிடும் போது 96.7 % அதிகரிப்பாகும். (ரூபா. 179.6 மில்லியன்கள்)




**பார்வையாளர் பற்றிய விபரம்**

- இவ்வருடம் பார்வையாளர் எண்ணிக்கையானது தாவரவியல் பூங்காக்கள் வரலாற்றில் முதல் தடவையாக 02 மில்லியன்களை விடவும் அதிகமாகும். (2,098,985) வெளிநாட்டுப் பார்வையாளர் எண்ணிக்கை (236,763) கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 12% அதிகரிப்பை காட்டுகிறது (210,949).



**செலவுகள் 2012**

- மூன்று பிரதான பூங்காக்களதும் ஏனைய அலகுகளதும் அபிவிருத்திப் பணிகள் திட்டமிட்டபடி நிறைவேற்றப்பட்டதோடு திறைசேரியிலிருந்து நிதியைப் பெற்றுக் கொள்வதில் சில தாமதங்கள் ஏற்பட்டன.

| விபரம் | தேறிய ஒதுக்கீடு (ரூபா மில்) | மொத்தச்செலவு (ரூபா மில்) | மீதமுள்ள ஒதுக்கீடு (ரூபா மில்) | % |
|---|---|---|---|---|
| **மூலதனச் செலவு** | 438.115 | 249.044 | 189.071 | **56.8** |
| **மீண்டெழும் செலவு** | 158.76 | 154.861 | 3.899 | **97.5** |

**விஞ்ஞான நடவடிக்கைகள்**

- திட்டமிட்ட படி விஞ்ஞான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

| | |
|---|---|
| மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் | 06 |
| பிரசுரிக்கப்பட்ட ஆய்வு கட்டுரைகள் | 13 |
| பூங்காக்களில் மக்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள் | |
| உயிரியல் பல் வகைமை பேணல் | 562 |
| தாவரப் பேணுகை | 2,121 |
| பூச்செடி செய்கை | 6,814 |
| நில வடிவமைப்பு | 1,220 |
| தாவர முறைமை மற்றும் தாவரக் கய முகாமைத்துவம் | 1,007 |
| பூங்காக்களில் தாவர உற்பத்தி | 235,164 |
| தாவர விற்பனை | 182,777 |
| பூங்காக்களின் மரத்தோட்டங்களுக்கு சேர்க்கப்பட்ட புதிய மரங்கள | 126 |
| வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் | |
| தேசிய சிவப்பு பட்டியலிடல் செயற்திட்டம் | பூக்கும் தாவர வகையைச் சார்ந்த 33,349 பதிவுகளும் 1205 மாதிரிகளும் 48 குடும்பங்களும் மதிப்பீடு செய்யப்பட்டன. பன்னத் தாவர வகையைச் சார்ந்த 5556 பதிவுகளும் 286 மாதிரிகளும் 23 குடும்பங்களும் மதிப்பீடு செய்யப்பட்டன. |

**அறிமுகம்.**

**பின்னணி.**

தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களமானது இலங்கையின் தாவரப் பல்வகைமையை வெளிவாரி முறைமையின் கீழ் பேணிப் பாதுகாப்பதற்கும், அலங்கார பூங்காவியல் கலையை ஊக்குவிப்பதற்குத் தேவையான ஆய்வு மற்றும் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் பாரியளவு பங்களிப்புச் செய்கின்றது.

**இலக்கு**

இலங்கையின் தாவரப் பாதுகாப்பிற்கான பிரதான மையமாக அமைந்து, உள்நாட்டுப் பொருளாதார மேம்பாட்டுக்காக முழுமையான பங்களிப்பை வழங்குவதுடன், தாவரவியல் விஞ்ஞான ரீதியாகவும் அழகியல் ரீதியாகவும் உலகின் மிகச்சிறந்த அயன மண்டல வலய தாவரவியல் பூங்காவாக 2015ம் ஆண்டளவில் ஆகுதல்

இத்திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற அனைத்துத் தாவரவியல் பூங்காக்களும் 19ம் நூற்றாண்டின் ஆரம்ப வருடங்களில் ஆரம்பிக்கப்பட்ட முன்னோடி தாவரவியல் நிறுவனங்களாகும். பேராதனை, அரச தாவரவியல் பூங்கா (1821), ஹக்கல தாவரவியல் பூங்கா (1861), கம்பஹா, ஹெரைத்கொட தாவரவியல் பூங்கா (1876) ஆகியன் வெளிநாட்டுப் பொருளாதாரத் தாவரங்கள் பற்றிய ஆய்வுக்கும் நாட்டின் தாவர வளங்களைக் கண்டறிவதற்கும் பிரித்தானியர்களால் ஆரம்பிக்கப்பட்டன. பொருளாதார மற்றும் சூழலியல் அபிவிருத்திகளுக்கான அனைத்துத் தாவர அறிமுகப்படுத்தல்களுக்கும் இந்நிறுவனங்களே பொறுப்பாகும்.

1912ல் விவசாயத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து தேசிய தாவரவியல் பூங்காக்கள் தினைக்களம் அதன் ஒரு பிரிவாக இயங்கியது. 2006ல் ஒரு பணிப்பாளர் நாயகத்தின் கீழ் தனியான திணைக்களமாக அது ஆக்கப்பட்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் தாவரங்களின் பாதுகாப்புக்கும் ஆய்வுக்கும் பொறுப்பான முன்னோடி நிறுவனமாக இயங்கி வருகின்றது.

**பணி**

இலங்கையின் இயற்கையானதும் வளமானதுமான சூழலில் காணப்படும் தாவரவியல் பற்றிய கற்கையாய்வு, நிலையான பாதுகாப்பு மற்றும் பொழுதுபோக்குக்கான சந்தர்ப்பங்களை மக்களுக்கு வழங்குதல்

இப்பூங்காக்கள் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் தாவரச் சேமிப்புக்கும் ஆய்வுக்குமான – குறிப்பாக அயன வலயத்துக்குரிய தென்கிழக்காசிய பிராந்தியத்தைச் சார்ந்த தாவரங்கள் – சிறப்பு மத்திய நிலையங்களாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. முழு உலகிலும் நன்கு அறியப்பட்டுள்ள இப்பூங்காக்களை வருடந்தோறும் 1.8 மில்லியனுக்கும் அதிகமான பார்வையாளர்கள் தரிசிக்கின்றனர்.

பேராதனை, கம்பஹா, ஹக்கல ஆகிய பிரதான தாவரவியல் பூங்காக்களுக்கும் மேலதிகமாக முதலாவது தேசிய மூலிகைத் தாவரப் பூங்கா 1950ல் ஆரம்பிக்கப்பட்டது. அத்தோடு உலர் வலய மற்றும் ஈரவலய தாவரவியல் பூங்காக்கள் முறையே அம்பாந்தோட்டையிலும், அவிசாவலையிலும் 2012 / 2013ம் ஆண்டுகளில் திறக்கப்படவுள்ளன.

**தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் செயற்பாடுகள்**

- இலங்கையின் தாவரவியல் பல்வகைத் தன்மையினை பாதுகாப்பதில் வெளிவாரி பாதுகாப்பு முறைகளை செயல்வலுப் பெறச் செய்தல் தொடர்பில் தேவையான திட்டங்களை வகுத்தலும் செயல்படுத்தலும்
- கல்வி மற்றும் தொடர்பாடல் முறைகளை பயன்படுத்தி இலங்கையின் தாவர வளங்கள் சம்பந்தமாகவும் தாவர வளங்களுடன் தொடர்புற்றுக் காணப்படும் பல்வேறு வகையான கைத் தொழில் நடவடிக்கைகளுக்கு தேவைப்படும் சரியான தகவல்களையும் கலையறிவினையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- இலங்கையில் பூச்செடிச் செய்கைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான பல்வேறு ஆராய்ச்சிகள் மற்றும் தொழில் நுட்ப முறைகளை பரீட்சித்தல் மற்றும் செயல்படுத்துதல்.
- இலங்கையின் தேசிய தாவரவியல் பூங்காக்களை உயர்தரத்தில் பராமரித்தல்.
- பொருத்தமான இடங்களில் புதிய தாவரவியல் பூங்காக்களை உருவாக்குவதற்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்தல்.
- அலங்கார தாவரவியல் ஆய்வினை இலங்கையில் விஸ்தரிப்பதற்குத் தேவையான ஆராய்ச்சிகள் மற்றும் தொழில்நுட்ப வேலைத்திட்டங்களை அமுலாக்குதல்.
- இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம் மிக்க தாவரங்களை பாதுகாப்பதற்குத் தேவைப்படும் தொழில் நுட்ப ஆலோசனைககளை வழங்குதல்.
- அநுராதபுரம் புனித அரச மரத்தின் ஆரோக்கியத்தைப் பேணுதல்.

**இத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் நிறுவனங்களும் அலகுகளும்**

1. அரச தாவரவியல் பூங்கா, பேராதனை
2. ஹக்கல தாவரவியல் பூங்கா, ஹக்கல
3. ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா – கம்பஹா
4. தேசிய தாவரவியல் கூடம் - பேராதனை
5. மூலிகைப் பூங்கா – கனேவத்த
6. உலர் வலய தாவரவியல் பூங்கா, மிரிஜ்ஜவில, அம்பாந்தோட்டை
7. சீதாவாக்கை ஈரவலய தாவரவியல் பூங்கா இலுக்ஓவிட்ட, அவிசாவலை
8. பூச்செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவு பேராதனை
9. கல்வி நிலையம் - பேராதனை
10. ஜனாதிபதி வாசஸ்தலப் பூங்கா – கொழும்பு
11. ஜனாதிபதி வாசஸ்தலப் பூங்கா – கண்டி
12. ஜனாதிபதி வாசஸ்தலப் பூங்கா - நுவரெலியா
13. ஜனாதிபதி மாளிகைப் பூங்கா, அநுராதபுரம்
14. அலரி மாளிகைப் பூங்கா – கொழும்பு
15. பிரதமர் அலுவலகப் பூங்கா – கொழும்பு
16. பிரதமர் வாசஸ்தலப் பூங்கா – நுவரெலியா
17. விசும்பாய, பிரதமர் வாசஸ்தலப் பூங்கா
18. சுவஹஸ் மல் செவன சுதந்திர சதுக்கம். கொழும்பு
19. பூங்கா உதவியாளர் அலுவலகம். நாரஹேன்பிட
20. பொது நலவாய போர் சமாதி. பிடகந்த, கண்டி
21. பொது நலவாய போர் சமாதி – பொரல்ல
22. பொது நலவாய போர் சமாதி – ஜாவத்த
23. பொது நலவாய போர் சமாதி – நிலாவெளி, திருகோணமலை
24. பசுமை இல்லம், மீகல்லாவ

**பணியாளர் விபரம்**

அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை : 699

தற்போதைய பணியாளர் விபரம் : 659 (நிரந்தர ஊழியர்: 429, சமுர்தி:12, ஒப்பந்தம்: 230)

நிரந்தர ஊழியர்களில் 17 பதவி நிலை அலுவலர்கள், 34 இலங்கை தொழில் நுட்ப சேவை அலுவலர்கள், 03 பட்டதாரி விவசாய மேற்பார்வை அலுவலர்கள், 22 பட்டதாரி நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் மற்றும் 36 முகாமைத்துவ சேவை அலுவலர்கள் அடங்குவர்.

**ஊழியர் அமைப்பு விபரம்**

| வகை | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் தொகை | தற்போதைய பணியாளர் தொகை |
|---|---|---|
| **சிரேஷ்டத் தரம்** | 31 | 17 |
| **மூன்றாம் நிலை** | 58 | 33 |
| **இரண்டாம் நிலை** | 95 | 72 |
| **ஆரம்ப நிலை** | 515 | 307 |
| ***சமுர்த்தி அலுவலர்கள்** | - | 12 |
| **ஒப்பந்தத் தொழிலாளர்** | - | 230 |
| **மொத்தம்** | 699 | 659 |

*அமைச்சரவைத் தீர்மானமொன்றின் படி சமுர்தி அதிகார சபையிலிருந்து தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்ட அலுவலர்கள்.

**பணியாளர் பயிற்சி மற்றும் இயலுமை விருத்தி**


| | விபரம் | நிறுவனம் | நாடு | பயிற்றப்பட்ட பணியாளர் |
|---|---|---|---|---|
| 1 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான பூத் தொழில் நுட்பப் பயிற்சி நெறி | உப அயன மண்டலப் பூக்களுக்கான ஃபியூஜியன் TCDC நிறுவனம் | சீனா | ஆய்வு அலுவலர், கம்பஹா |
| 2 | RUAF-FSTT புத்தாக்கச் செயற்திட்டம்: பிராந்திய ஒழுங்கமைப்புச் செயலமர்வு | கெப்பிட்டல் ஹோட்டல், பெங்களூர் | இந்தியா | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், கம்பஹா |
| 3 | அலுவலக முகாமை | தொழிலாளர் கற்கைகளுக்கான தேசிய நிறுவனம் | இலங்கை | 09 முகாமைத்துவ உதவியாளர்கள் |
| 4 | அலுவலக முகாமை | தொழிலாளர் கற்கைகளுக்கான தேசிய நிறுவனம் | இலங்கை | 08 முகாமைத்துவ உதவியாளர்கள் |
| 5 | MSc. தாவர விஞ்ஞானம் | வெகனிஞ்சன் பல்கலைக் கழகம் | நெதர்லாந்து | 02 நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள், பூச்செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவு. |

## சாதனைகள்

### பார்வையாளர்கள்

பேராதனை, ஹக்கல, கம்பஹா ஆகிய தாவரவியல் பூங்காக்கள் உயர் தரத்தில் பேணப்பட்டதோடு 2,098,985 பேர் (1,862,222 உள்நாட்டவர்களும் 236,763 வெளிநாட்டவர்களும்) இவ்வருடம் இவற்றைத் தரிசித்தனர். தாவரவியல் பூங்காக்களின் வரலாற்றில் கூடுதலான பார்வையாளர்கள் வருகை தந்தது இவ்வருடத்திலாகும். அவ்வாறே வெளிநாட்டுப் பார்வையாளர்களின் எண்ணிக்கையும் முன்னைய வருடத்தோடு ஒப்பிடும் போது 12% வளர்ச்சியைக் காட்டுகிறது.


| பார்வையாளர் வகை | பேராதனை | ஹக்கல | கம்பஹா | மொத்தம் |
|---|---|---|---|---|
| உள்நாடு வளர்ந்தோர் | 895,028 | 354,522 | 163,134 | 1,412,684 |
| உள்நாடு சிறுவர் | 271,999 | 137,986 | 21,998 | 431,983 |
| சிரேஷ்ட பிரஜைகள் | 9,054 | 7,516 | 985 | 17,555 |
| **மொத்த உள்நாட்டு பார்வையாளர்கள்** | **1,176,081** | **500,024** | **186,117** | **1,862,222** |
| வெளிநாடு வளர்ந்தோர் | 215,914 | 9,150 | 201 | 225,265 |
| வெளிநாடு சிறுவர் | 7,310 | 712 | 5 | 8,027 |
| வெளிநாட்டு மாணவர்கள் | 3,238 | 230 | 3 | 3,471 |
| **மொத்த வெளிநாட்டு பார்வையாளர்கள்** | **226,462** | **10,092** | **209** | **236,763** |
| **மொத்த பார்வையாளர் எண்ணிக்கை** | **1,402,543** | **510,116** | **186,326** | **2,098,985** |



**வருமானம்**


நுழைவுக் கட்டணம், தாவர விற்பனை மற்றும் வாடகைகள் மூலம் 2011 இல் ரூபா 353.4 மில்லியன்கள் மொத்த இலாபமாக பெறப்பட்டது. முன்னைய வருடத்தோடு ஒப்பிடும் போது இது 96.7 % அதிகரிப்பாகும். (ரூபா 179.6 மில்லியன்) பார்வையாளர்கள் மூலம் பெறப்பட்ட வருமானம் ரூபா. 329 மில்லியன்கள். வேறு மூலங்களிலிருந்து பெறப்பட்ட வருமானம் ரூபா. 24.4 மில்லியன்கள்.


| அலகுகள் | மொத்த வருமானம் |
| --- | --- |
| அரச தாவரவியல் பூங்கா – பேராதனை | 302,944,728.04 |
| தாவரவியல் பூங்கா - ஹக்கல | 34,513,127.39 |
| தாவரவியல் பூங்கா – கம்பஹா | 13,231,414.00 |
| மூலிகைத் தாவரப் பூங்கா – கனேவத்த | 705,204.00 |
| உலர் வலய தாவரவியல் பூங்கா – அம்பாந்தோட்டை | 9,750.00 |
| சுவஹஸ்மல் செவன தாவர நாற்று மேடை | 1,529,041.00 |
| ஈர வலய தாவரவியல் பூங்கா-அவிசாவலை | 473,700.00 |
| மொத்தம் | **353,406,964.43** |




| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|---|
| Annual Revenue | 75.63 | 112.64 | 117.87 | 128.67 | 178.39 | 353.41 |

**தேசிய தாவரவியல் பூங்காக்களில் உற்பத்தி செய்யப்பட்ட தாவரங்களிலிருந்து விற்பனை செய்யப்பட்ட தாவரங்களின் எண்ணிக்கையும் அதன் மூலம் பெறப்பட்ட வருமானமும்**






**அரச அலுவலர்களுக்கான முற்பணக் கணக்கு விபரங்கள்**

**வகை இல: 32201**

| | செலவுகளுக்கான உயர் எல்லை ரூ. | பெறுகைகளுக்கான அதிகுறைந்த எல்லை ரூ. | பற்று மீதிக்கான உயர் எல்லை ரூ. |
|---|---|---|---|
| வரவு செலவுத் திட்ட உத்தேசம் 2011 | **15,700,000.00** | **8,300,000.00** | **57,000,000.00** |
| மீளமைக்கப்பட்ட எல்லைகள் | - | - | - |
| உண்மைத் தரவு | **14,421,276.00** | **10,181,512.00** | **46,032,508.00** |

**செலவுகள்**

**மூலதனச் செலவுகள்**

| உப செயற் திட்டம் | விடயக் குறியீடு | விடய விபரம் | தேறிய ஒதுக்கீடு 2012 ன் வரவு செலவுத் திட்டம் ரூ. | மொத்தச் செலவு ரூ. | மீதமுள்ள ஒதுக்கீடு ரூ. | % |
|---|---|---|---|---|---|---|
| | | **கட்டிடங்களையும், கட்டமைப்புக் களையும் புனர் நிர்மாணம் செய்தல்** | | | | |
| 0 | 2001 | கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 2,0000 | 1,981.510 | 18.490 | 99 |
| 0 | 2002 | பொறித் தொகுதி, இயந்திரங்கள், உபகரணங்கள், | 300 | 228.640 | 71.360 | 76 |
| 0 | 2003 | வாகனங்கள் | 450 | 434.473 | 15.527 | 97 |
| | | **மூலதனச் சொத்துக்களைப் பெற்றுக் கொள்ளல்** | | | | |
| 0 | 2101 | வாகனங்கள் | 12,000 | 11,438.450 | 561.550 | 95 |
| 0 | 2102 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 450 | 442.207 | 7.793 | 98 |
| 0 | 2103 | பொறித் தொகுதி, இயந்திரங்கள், உபகரணங்கள், | 315 | 312.053 | 2.947 | 99 |
| 0 | 2104 | கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 1,000 | 866.545 | 133.455 | 87 |
| 0 | 2105 | காணி மற்றும் காணி மேம்படுத்தல்கள் | 1,500 | 985.199 | 514.801 | 66 |
| | | **மூலதன மாற்றுகைகள்** | | | | |
| 0 | 2201 | தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம் | 40,000 | 40,000 | 0.00 | 100 |
| 0 | 2401 | பயிற்சி மற்றும் இயலுமை விருத்தி | 100 | 98.655 | 1.345 | 99 |
| | | **விஷேட செயற் திட்டங்கள்** | | | | |
| 1 | 2502 | கம்பஹா தாவரவியல் பூங்கா கனேவத்த மூலிகைப் பூங்கா | 30,000 | 22,946.207 | 7,053.793 | 77 |
| 1 | 2502 | பூச்செடிச் செய்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 40,000 | 28,928.897 | 11,071.103 | 72 |
| 2 | 2502 | உலர் வலய தாவரவியல் பூங்கா | 170,000 | 65,913.671 | 104,086.329 | 39 |
| 3 | 2502 | அவிசாவலை தாவரவியல் பூங்கா | 40,000 | 19,303.089 | 20,696.911 | 48 |
| 4 | 2502 | பூச்செடிச் செய்கை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | 100,000 | 55,164.648 | 44,835.352 | 55 |
| | | **மொத்தம்** | **438,115** | **249,044.244** | **189,070.756** | **57** |

**மீண்டெழும் செலவுகள்**

| விடயக் குறியீடு | விடய விபரம் | தேறிய ஒதுக்கீடு 2010 ன் வரவு செலவுத் திட்டம் | மொத்தச் செலவு ரூ. | மீதமுள்ள ஒதுக்கீடு | % |
|---|---|---|---|---|---|
| | **ஆட்களுக்கான கொடுப்பனவுகள்** | | | | |
| 1001 | சம்பளங்களும் வேதனங்களும் | 83,000,000.00 | 80,460,829.00 | 2,539,171.00 | 96.9% |
| 2002 | மேலதிக நேர வேலை மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | 4,800,000.00 | 4,432,177.00 | 367,823.00 | 92.3% |
| 1003 | வேறு கொடுப்பனவுகள் | 38,500,000.00 | 38,134,192.00 | 365,808.00 | 99.0% |
| | **பிரயாணச் செலவுகள்** | | | | |
| 1101 | உள்நாடு | 1,300,000.00 | 1,268,442.00 | 31,558.00 | 97.6% |
| 1102 | வெளிநாடு | 228,000.00 | 226,386.00 | 1,614.00 | 99.3% |
| | **வழங்கல்கள்** | | | | |
| 1201 | காகிதாதிகளும் அலுவலகத் தேவைகளும் | 582,000.00 | 581,854.00 | 146.00 | 100.0% |
| 1202 | எரிபொருள் | 2,000,000.00 | 1,956,104.00 | 43,896.00 | 97.8% |
| 1203 | உணவு மற்றும் சீருடை | 150,000.00 | 149,781.00 | 219.00 | 99.9% |
| 1205 | வேறு | 2,800,000.00 | 2,798,208.00 | 1,792.00 | 99.9% |
| | **நடத்துகைச் செலவுகள்** | | | | |
| 1301 | வாகனங்கள் | 1,400,000.00 | 1,398,646.00 | 1,354.00 | 99.9% |
| 1302 | பொறித் தொகுதி, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 500,000.00 | 430,218.00 | 69,782.00 | 86.0% |
| 1303 | கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 400,000.00 | 399,933.00 | 67.00 | 100.0% |
| | **சேவைகள்** | | | | |
| 1401 | போக்குவரத்து | 900,000.00 | 867,657.00 | 32,343.00 | 96.4% |
| 1402 | தபால் மற்றும் தொடர்பாடல் | 1,400,000.00 | 1,325,813.00 | 74,187.00 | 94.7% |
| 1403 | மின்சாரம் மற்றும் நீர் | 3,400,000.00 | 3,072,975.00 | 327,025.00 | 90.4% |
| 1404 | வாடகைகளும் உள்நாட்டு வரிகளும் | 100,000.00 | 99,334.00 | 666.00 | 99.3% |
| 1405 | ஏனைய சேவைகள் | 16,500,000.00 | 16,461,148.00 | 38,852.00 | 99.8% |
| | **மாற்றுகைகள்** | | | | |
| 1506 | ஆதனக் கடன் வட்டி | 800,000.00 | 797,096.00 | 2,904.00 | 99.6% |
| | மொத்தம் | **158,760,000.00** | **154,860,793.00** | **3,899,207.00** | **97.5%** |

## அரச தாவரவியல் பூங்கா, பேராதனை

பேராதனை, அரச தாவரவியல் பூங்காவானது, இலங்கையின் மிக நீண்ட நதியான மகாவலி கங்கையால் சூழப்பட்ட குதிரை லாட வடிவிலான தீப கண்டமொன்றில் அமைந்துள்ளது. இது மத்திய மலை நாட்டின் தலை நகரான கண்டி மாநகரிலிருந்து 6 ½ கி.மீ. தூரத்தில் சுமார் 147 ஏக்கர் நிலப்பரப்பில் (60 ஹெக்டயர்) அமைந்து சுமார் 4500 தாவர வகைகளைக் கொண்டு காணப்படுகின்றது.

மேலும் அது பல வகையினதான அலங்காரத் தாவரங்களுக்கும் இலங்கையின் விஷேட வாசனைத் திரவியங்களை உற்பத்தி செய்யும் பல்வகைச் செடி, கொடிகளுக்குமான இல்லமாகவும் அமைந்துள்ளது. அதன் புல்வெளிகள் நெடுகிலும் செழிப்பாக வளர்ந்த பிரமாண்டமான அயன வலய மரங்கள் காணப்படுகின்றன. இப்பூங்காவின் பிரதான அலங்காரமாக அதன் ஓக்கிட் இல்லம் காணப்படுகிறது. அதில் 300 க்கும் அதிகமான மிக அழகிய , செழிப்புமிக்க ஓக்கிட் வகைகள் காணப்படுகின்றன. அதன் வாசனைத் திரவியத் தோட்டத்தில் பாரம்பரிய ஆயுர்வேத மருந்துகளைத் தயாரிக்கப்பயன்படும் மரங்களும் தாவரங்களும் நிறைந்து காணப்படுகின்றன. இப்பூங்காவின் உயர்ச்சி மிக்க அழகுக்கு மகாவலி கங்கை மேலும் மெருகூட்டுகிறது.










⮝ மரத்தோட்டடம்

⮜ அரச தாவரவியல் பூங்காவுக்கான மாதாந்த பார்வையாளர் வருகை

⮜ பூந்தோட்டடம்

⮟ ஜப்பானியத் தோட்டம்



**பார்வையாளர்கள்**

1,402,543 பேர் (1,176,081 உள்நாட்டவர்களும் 226,462 வெளிநாட்டவர்களும்) இவ்வருடம் இப் பூங்காவை தரிசித்தனர். கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இது 8.7 % அதிகரிப்பாகும். மேலும் வெளிநாட்டுப் பார்வையாளர்களின் எண்ணிக்கை 12.9% அதிகரிப்பைக் காட்டுகிறது (200,468).

**வருமானம்**

32,176 வெளிக் களத் தாவரங்கள், 2,873 அந்தூரியம் தாவரங்கள், 6,676 ஓகிட் தாவரங்கள், 32,592 இலைத்தாவரங்கள், 565 மூலிகைத் தாவரங்கள் 1477 விதைப் பக்கட்டுகளும் வேறு தாவர உற்பத்திகளும் இவ்வருடம் விற்பனை செய்யப்பட்டன. இவ்வருடத்தில் பெறப்பட்ட ரூபா. 302,943,728.00 வருமானத்தில் ரூபா. 290.7 மில்லியன் பார்வையாளர்கள் மூலமும் ரூபா. 3.3 மில்லியன் தாவர விற்பனை மூலமும் ரூபா. 0.2 மில்லியன் பிரசுரங்கள் மூலமும் ரூபா. 8.7 மில்லியன் வாடகைகள் மூலமும் ரூபா. 0.1 மில்லியன் படப்பிடிப்பு மூலமும் பெறப்பட்டது.

**<u>தாவரச்சேகரிப்பை செறிவாக்குதல்</u>**

107, 029 வெளிக்களத் தாவரங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. மேலும் சில முக்கியமான, அரிதான தாவரங்கள் (உதாரணமாக: *Lodoicea maldivica* விதைகள்) சேகரிக்கப்பட்டு பூங்காவின் தாவரச் சேகரிப்பு செறிவாக்கப்பட்டது. அத்தோடு பூங்காவின் நிலவடிவமைப்பு அலங்காரத்தை மேம்படுத்தவும் தாவரங்களின் வெளிவாரிப் பாதுகாப்புத் தொடர்பிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

93 தாவர மாதிரிகள் பற்றிய விஞ்ஞானத் தரவுகள் சேகரிக்கப்பட்டதோடு, பூங்காவின் தாவரச் சேகரிப்புக் குறித்த தகவல்களைத் திரட்டும் பொருட்டு புகைப் படங்களும் எடுக்கப்பட்டன. 94 தாவரக்கய அறிக்கைகள் தயாரிக்கப்பட்டதோடு, 143 தாவரக்கய மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பூங்காவின்

தாவரக்கய சேகரிப்புடன் இணைக்கப்பட்டன.

வெளிவாரிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற வகையில் அழிவுறும் அபாயத்துக்குட்பட்டுள்ள/ அருமையான தாவரங்கள் பற்றிய தகவல்களைப் பெறும் பொருட்டு களப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. அரச தாவரவியல் பூங்காவின் வெளிவாரிப் பாதுகாப்புச் சேகரிப்பை மேம்படுத்தும் பொருட்டு, இலங்கைக்கேயுரிய தாவரங்களைச் சேகரிப்பதற்கான சில களப் பயணங்களும் மேற்கொள்ளப்பட்டன. ரிடிகல களப் பயணத்தின் போது 10 தாவர வகைகளும் 14 தாவரக் கய மாதிரிகளும் சேகரிக்கப்பட்டன. அத்தோடு சிங்கராஜ களப் பயணத்தின் போது 205 தாவரங்களும் (64 வகைகள்) 52 தாவரக் கய மாதிரிகளும் சேகரிக்கப்பட்டன. பிலிக்குட்டுவ வனத்துக்கு மற்றொரு களப்பயணம் மேற்கொள்ளப்பட்டு 05 தாவர வகைகளும் 13 தாவரக் கய மாதிரிகளும் சேகரிக்கப்பட்டன.

மரத்தோட்டத்தில் 58 தாவரங்கள் நடப்பட்டன. இவற்றில் புதிய உள்நாட்டுத் தவரங்கள், ஏற்கனவே உள்ள உள்நாட்டுத் தவரங்கள், புதிய மற்றும் ஏற்கனவே உள்ள வெளிநாட்டுத் தாவரங்கள் என்பன அடங்கும்.உயிரிச் சேகரிப்பை மேம்படுத்தும் பொருட்டு புதிய சேர்மானங்கள் 217 மேற்கொள்ளப்பட்டன. 46 மரங்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. (*Markhamia hidebrandtii*, *Cupressus funebris*, *Bauhinia purpurea* (B-347), *Chrysophyllum roxburghii*, *Myristica fragrans* (N-249), *etc.)* மேலும் 21 வெளிநாட்டுத் தாவரங்களும் அகற்றப்பட்டன. (*Roystonia regia*, *Myristica fragrans* (N-233a) 13 மரப் பேணுகை நிகழ்ச்சித் திட்டங்களும்





- ⮙ தாவரங்களுக்கு லேபல் இடல்
- ⮚ களப் பயணம்
- ⮛ கல்வி நிகழ்ச்சியொன்று



மேற்கொள்ளப்பட்டன.

தாவரங்கள் பற்றிய தகவல்களை வழங்கும் வகையில் 1077 லேபல்கள் பொருத்தப்பட்டன. மேலும் ஞாபகார்த்த மரங்களின் லேபல்கள் 10 திருத்தியமைக்கப்பட்டன.

**தகவல் பரப்புகை**

***கற்கை நெறிகள்***

கற்கை நிலையத்தின் வசதிகள் மேம்படுத்தப்பட்டன. பேராதனை தாவரவியல் பூங்காவில், நவீன பூச்செடியியல் தொழில் நுட்பம் மற்றும் நில வடிவமைப்பு தொடர்பான மூன்று மாத முழு நேரக் கற்கை நெறி 78 இளைஞர், யுவதிகளுக்கு போதிக்கப்ப்ட்டது. மேலும் 4,852 பேருக்கு நாற்று மேடை முகாமைத்துவம், தாவர அடையாளம் காணல், உயிரியல் பன்மைத்துவம், மரச் சிகிச்சை, பூ அலங்காரம், அறுவடைக்குப் பின்னரான தொழில் நுட்பங்கள், தாவரவியல் பூங்காக்கள், நிலவடிவமைப்பு ஆகிய துறைகளில் பயிற்றுவிக்கப்பட்டனர். இதற்கு மேலதிகமாக ஒரு வருட மற்றும் இரு வருட டிப்ளோமா கற்கைகளும் நிலவடிவமைப்புக்கான ஒடோ கெட் கற்கையும் போதிக்கப்பட்டன.

அரச திணைக்கள அதிகாரிகளுக்கான 05 நாள் தாவர





- புதிய கழிவறைத் தொகுதி
- பாதை மேம்படுத்தல்

அடையாளம் காணல் செயலமர்வும் 100க்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான ஜழிப்பூட்டல் நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.

***விழிப்பூட்டல் பிரசுரங்கள்***

இலங்கைக்கு மாத்திரம் உரிய தாவரங்கள் மற்றும் வெளிநாட்டுத் தாவரங்கள் பற்றிய 02 கையேடுகள் வடிவமைக்கப்பட்டு வெளியீட்டுக்குத் தயாராகவுள்ளன.

***களப் பரிசோதனைகள்***

பின்வரும் களங்களில் களப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு நில வடிவமைப்பை மேம்படுத்த ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

- போவலதன்ன மற்றும் உக்குவலை நீர் மின் நிலையங்கள்
- தளவைத்தியசாலை மாத்தளை
- தேசிய வடிவமைப்பு நிலையம்
- விக்டோரியா, ரன்தெனிகல, ரன்தெம்பே, கொத்மலை நீர் மின் நிலையங்கள்.

***ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்கள்***

பின்வரும் நிறுவனங்களுக்கும் நபர்களுக்குமான நில வடிவமைப்பு பூங்காவியல்

ஆலோசனை செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

- பல்லேகல ஹோட்டல் பாடசாலை
- கண்டி மற்றும் திருகோணமலை இராணுவ தலைமையகங்களின் ஆசிரியர் கல்லூரிகள்
- நில்லம்ப சமுர்தி அதிகார சபை அலுவலர்கள்
- ஏற்றுமதி விவசாய திணைக்களம்
- காலி கோட்டை அலுவலர்களுக்கான மரப் பேணுகைப் பயிற்சி
- கண்டி மாநகர சபை அலுவலர்கள்

கண்டி பெரியாஸ்பத்திரி, திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண சபை அலுவலகம் என்பவற்றுக்கான நில வடிவமைப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன.

அம்பாந்தோட்டை தாவரவியல் பூங்காவின் நில வடிவமைப்பு மற்றும் பூங்காவியல் நடவடிக்கைகளுக்கு அரச தாவரவியல் பூங்கா அதிகாரிகள் தமது நிபுணத்துவ சேவையை வழங்கினர்.

### *தாவர அடையாளம் காணல் நிகழ்ச்சித் திட்டங்கள்*

சப்ரகமுவ பல்கழைக்கழக மாணவர்களுக்கு பிரதான எல்லைத் தாவரங்களை அடையாளம் காண்பதற்கான உதவிகள் செய்து கொடுக்கப்பட்டன. ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகளுக்கும் நுவரெலியா பிரதேச செயலக அதிகாரிகளுக்கும் தாவர அடையாளம் காணல் பற்றிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. கல தாவரவியலாளர்கள் சங்கத்தின் 30 அங்கத்தவர்களுக்கு தாவர அடையாளம் காணல் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது. மகாவலி அதிகார சபையின் 20 அதிகாரிகளுக்கு மூங்கில் மர அடையாளம் காணல் நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டது. சிறி ஜயவர்தன புர பல்கலைக் கழகத்தை சேர்ந்த20 மாணவர்களுக்கும் தேசிய வடிவமைப்பு நிலையத்தைச் சேர்ந்த 12 மாணவர்களுக்கும் தாவர அடையாளம் காணல் பற்றி விளக்கமளிக்கப்பட்டது. 40 நாடுகளைச் சேர்ந்த மீன்பிடித்துறை அமைச்சர்களுக்கும் சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த விவசாயத் துறை பேராசிரியர்கள் இருவருக்கும் தாவர அடையாளம் காணல் பற்றிய வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

➢ விழுந்த மரமான *Shorea ovalifolia* (C-207)










⮝இலங்கை குளத்தை புணரமைத்தல்

⮜"தயட்ட செவன"தேசிய மர நடுகைத் திட்டம்

⮝ பூக்கும் காலத்தில் பூங்காவின் அழகுத் தோற்றம்

⮟ தயட்டகிருல கண்காட்சி

**அபிவிருத்தி நடவடிக்கைகள்**

நவீன வசதிகள் உடனான 04 கழிவறைகள் அமைக்கப்பட்டன. சுத்திகரிப்பு செயற்பாடு தனியார் துறைக்கு விடப்பட்டது. உள்ளக வீதிகள் மேம்படுத்தப்பட்டன. புதிய நினைவுச் சின்ன விற்பனைக் கூடம் மற்றும் அனுமதிச் சீட்டுக் கூடம் என்பன நிர்மாணிக்கப்பட்டு வருவதோடு (75% வேலைகள் நிறைவடைந்துள்ளன) தெற்கு பூங்கா பகுதியில் ஒரு கள அலுவலகமும் நிர்மாணிக்கப்பட்டது. நிழல் இல்லங்கள், கழிவறைகள், அலுவலர் விடுதிகள் ஆகியவற்றின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டதோடு புதிய உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டன.



**விஷேட அதிதிகளின் வருகை**

மாலை தீவின் வீடமைப்பு, போக்குவரத்து மற்றும் சூழலியல் அமைச்சரான திரு. முஹம்மத் அஸ்லம் அவர்களும் பிரதியமைச்சரான திரு. ஸிபாஸ் அலி அவர்களும் வருகை தந்தனர். லாவோஸ் நாட்டின் அமைச்சரவை அமைச்சர் ஒருவரும் மேலும் 3 அங்கத்தவர்களும் வருகை தந்தனர். பங்களாதேஷ், இந்தியா, மாலைதீவுகள் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 50 பேர் கொண்ட தூதுக்குழுவொன்று பங்களாதேஷ், பாகிஸ்தான், அமெரிக்கா ஆகிய நாடுகளின் இராணுவ தளபதிகளும் இஸ்ரேல் விவசாய அமைச்சரும் தூதுக் குழுவும் அவுஸ்திரேலிய அமைச்சர்கள் 8 பேரும் சீன வன பரிபாலனத் துறை அதிகாரிகள் 11 பேரும் சீன மலர்ச்சங்கத் தலைவி திருமதி. ஜியாங் ஸெஹுய் அவர்களும் வருகை தந்ததோடு இன்னும் பல அதிதிகளும் வருகை தந்தனர்.

**விஷேட நிகழ்வுகள்**

இலங்கைக் குளம் புனரமைக்கப்பட்டு தேசிய மலரான *Nymphaea nouchali* (பொதுப்பெயர்: மானெல்) நடப்பட்டது. பேராதனை அரச தாவரவியல் பூங்காவில் 2011 நவம்பர் 15ம் திகதி "தயட்ட செவன" திட்டத்தின் கீழ் 28 தாவர மாதிரிகள் நடப்பட்டன.

விழுந்த மரமான *Shorea ovalifolia* (C-207) – இலங்கைக்கே உரிய அரிய மரம் இலங்கை மின்சார சபையின் உதவியோடு வெற்றிகரமாக மீள்நடப்பட்டது.

புத்தல மொனராகலையில் இடம்பெற்ற தயட்ட கிருல கண்காட்சிக்கான நில வடிவமைப்பு ஏற்பாடுகளுக்கு எமது அதிகாரிகள் ஆலோசனைகளை வழங்கியதோடு அங்கே ஒரு காட்சிக் கூடமும் அமைக்கப்பட்டது.

வவுனியாவில் இடம் பெற்ற "கொவிசத்திய" கண்காட்சியில் எமது அதிகாரிகள் கலந்து கொண்டு பூச்செடியியல் பற்றி மக்களுக்கு அறிவூட்டினர்.

**பணியாளர் விபரம்**

***2011 இல் இவ்வலகில் உள்ள பணியாளர் விபரம்***

| | **பதவி** | **அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்** |
|---|---|---|
| 1. | பிரதிப்பணிப்பாளர் | 01 |
| 2. | பூங்கா பொறுப்பாளர் | 01 |
| 3. | அதிபர் | 01 |
| 4. | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் | 02 |
| 5. | விவசாய ஆலோசகர்கள் | 03 |
| 6. | முகாமைத்துவ உதவியாளர்கள் | 05 |
| 7. | தோட்ட உதவியாளர்கள் | 05 |
| 8. | உதவி கட்டண சேகரிப்பாளர்கள் | 08 |
| 9. | சாரதி | 01 |
| 10. | மேற்பார்வையாளர் | 03 |
| 11. | காவலாளி | 20 |
| 12. | சுற்றுலா விடுதிக் காப்பாளர் | 01 |
| 13. | லொறி சுத்திகரிப்பாளர் | 01 |
| 14. | நாற்று மேடைஊழியர் | 02 |
| 15. | ஒட்டு ஊழியர் | 01 |
| 16. | டிரக்டர் வண்டி ஓட்டுனர் | 02 |
| 17. | தச்சன் | 01 |
| 18. | மேசன் | 03 |
| 19. | லேபல் எழுதுனர் | 02 |
| 20. | புல்வெட்டும் இயந்திர இயக்குனர் | 06 |
| 21. | இரும்பு ஒட்டுனர் | 01 |
| 22. | கொல்லன் | 01 |
| 23. | மரம் வெட்டுனர் | 03 |
| 24. | மரம் அறுப்பவர் | 01 |
| 25. | நிரந்தர தொழிலாளர்கள் | 65 |
| 26. | ஒப்பந்த தொழிலாளர்கள் | 37 |
| | **மொத்தம்** | **177** |

***இடமாற்றங்கள்***

கலாநிதி திருமதி ஏ.எம்.ஏ.எஸ்.அத்தநாயக்க தேசிய தாவரக் கயத்திலிருந்து அரசதாவரவியல் பூங்காவுக்கு 2011 ஏப்ரல் 7 ம் திகதி இடமாற்றப்பட்டார்.

புல்வெட்டும் இயந்திர இயக்குனர் திரு. என்.ஜீ. விபுலஸேன கனேவத்த மூலிகைப் பூங்காவிலிருந்து அரச தாவரவியல் பூங்காவிற்கு 2011 ஆகஸ்ட் 23 ம் திகதி இடமாற்றப்பட்டார்.

***பதவி உயர்வுகள்***

அரச தாவரவியல் பூங்காவின் முன்னாள் பிரதிப்பணிப்பாளர் திரு. கே.என். யாப்பா (ஆராய்ச்சி தொழில் நுட்பம் மற்றும் இடமாற்றம்) பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டார்.

***ஓய்வு பெறல்கள்***

உதவி கட்டண சேகரிப்பாளர்களான திரு. எச்.எம்.எஸ்.பீ. ஹேரத், திருமதி. எஸ்.ஆர்.டப்லிவ்.எம்.எச். மெனிக்கே, திரு. ஆர்.எம். ஜயதிலக்க ஆகியோர் முறையே 2011 ஜனவரி 20, பெப்ரவரி 02, டிசம்பர் 21 ஆகிய திகதிகளில் ஓய்வு பெற்றனர்.

## பூச்செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகு

பூச்செடிச் செய்கைத் துறையோடு தொடர்பான ஆய்வுகளைச் செய்வதும் பயிற்சி நிகழ்ச்சிகள், கள ஆலோசனை சேவைகள், இத்துறையிலான முதலீட்டு வாய்ப்புக்கள் பற்றிய தகவல்களை வழங்குதல் மற்றும் மாவட்ட மட்டத்தில் பூச்செடிச் செய்கையாளர் சங்கங்களை உருவாக்குதல். உபகரணங்களையும் உள்ளீடுகளையும் வழங்குதல் ஆகிய பணிகள் மூலம் பூச்செடிச் செய்கைத் துறையின் அபிவிருத்திக்குப் பங்களிப்பதும் இவ்வலகின் பணியாகும்.

அண்மைக்காலமாக பூச்செடிச் செய்கைத் துறையானது இலங்கையில் பெருத்த அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரும் தொழிற்துறையாக மாறியுள்ளது. மேலதிக வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கும் தொழில் வாய்ப்புக்களை வழங்கவும் இத்துறையானது மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாகும். பூச்செடிச் செய்கையில் ஈடுபட்டுள்ளோர் தமது இயலுமைகளைப் புரிந்து கொள்வதற்கும் நிலைபேற்றுத் தன்மை கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் பெரும் இலாபங்களை ஈட்டிக் கொள்வதற்கும் இவ்அலகு உதவுகிறது.



**ஆய்வுப் பணிகள்**

நாட்டின் பூச்செடி வளர்ப்புத் துறை தொடர்பாக பின்வரும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

1. *Bambusa multiplex* எனப்படும் வேலி மூங்கில்களை ஆய்வுகூடத்தில் பேரளவில் உருவாக்கம் செய்வதற்கான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது.
2. *Ohpiophogon japonicus* தாவரத்தின் வளர்ச்சியில் Benzylamino purine மற்றும் Indole acetic acid ஆகியவற்றின் தாக்கம் பற்றிய ஆய்வு வளர்ப்பு ஊடகம் வளர்ச்சி ஹோமோன்கள் ஆகிய இரண்டுக்குமே நேர்மறையான தாக்கம் இருப்பது கண்டறியப்பட்டது.
3. சிவப்பு ஓரங்களைக் கொண்ட கோர்டிலைன் தாவரங்களுக்கான உரப்பாவனை குறித்த ஆரம்ப மதிப்பீடுகள் மெதுவாக வெளிவிடப்படும் உரத்துடனான தும்புத் தூள் ஊடகத்தில் வளர்வதானது மணல் மற்றும் இலை அச்சு ஊடகத்தில் வளரும் தாவரத்தை விட சிறந்தது என கண்டறியப்பட்டது.
4. சாடிகளில் வளர்க்கப்படும் ஜேபரா தாவரத்துக்கான பொருத்தமான கலவையை தீர்மானிப்பதற்கான ஆய்வும் நிறைவு பெற்றுள்ளது. 2:1:1 என்ற விகிதத்தில் இலை அச்சுக் கலவை பாதி எரிக்கப்பட்ட உமி மாட்டு உரம் என்பனவும் 1:2:1:1 என்ற விகிதத்தில் மேல்மண், இலை அச்சு, மாட்டு உரம், மணல் என்ற கலவையும் சாடியில் வளர்க்கப்படும் ஜேபராவுக்கான சிறந்த ஊடகமாகும்.
5. *Zamioculcas zamifolia*; தாவரத்துக்கான துரித உருவாக்கல் முறைமையொன்று உருவாக்கப்பட்டது.
6. சிரிட்டா மூனி தாவரத்தின்









- *Ohpiophogon japonicas*
- சாடிகளில் ஜேர்பரா
- *Cordyline* red edge
- *Bambusa multiplex* இனப்பெருக்கம்

நுண்தாவரங்களை உருவாக்குவதற்கான ஆய்வுகளும்



⮝ *Chirita moonii* ⮟ *Zamioculcas zamifolia*



மேற்கொள்ளப்பட்டன.

**பதாகைகள்**

பெறுமதி சேர்க்கப்பட்ட *Dracaena sanderiana* தாவர உற்பத்தி –எம்.சீ. விக்ரமசிங்ஹ.

*Cerbera manghas* தாவரத்தின் இலைகளின் சாற்றை

பயன்படுத்தி *zamifolia*

*zamifolia*

டென்ரோபியம் தாவரத்தை தாக்குகின்ற பூச்சிகளை கட்டுப்படுத்தும் பூச்சி நாசினியை உருவாக்கும் பொருட்டான மதிப்பீடுகள் செய்யப்பட்டன. ஏ.என். நாணயக்கார.

**தாவர வளர்ப்பு**

எமது நாட்டுக்குரிய தாவரங்கள், ஓக்கிட் மற்றும் அந்தூரியம் தாவரங்களிலிருந்து கலப்பு இனங்களை உருவாக்குவதற்கான பல நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதன் மூலம் விரும்பத்தகு நிறம், விளைச்சல், தரம், நோய்களைத் தாங்கும் சக்தி கொண்ட தாவர வகைகளை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

லேடி ஜேன் வகை அந்தூரியங்களின் 16 புதிய கலப்பு வகைகள் தெரிவு செய்யப்பட்டு இனப் பெருக்கம் செய்யப்பட்டதோடு வளர்ப்போருக்கு வழங்கவும் பட்டன.

ஆய்வு கூடத்தில் பல்வேறு வகை ஓக்கிட் கலப்பினங்களின் விதை மூலம் உருவாக்கப்பட்ட 24 தாவரங்கள் வளர்க்கப்பட்டன.

***எமது நாட்டுக்குரிய தாவரங்கள்***

பல்வேறு கலப்பு இனங்களின் கன்றுகள் அடங்கலாக சேகரிப்பில் உள்ள அனைத்து தாவரங்களுக்குமான பொதுப்பேணுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. *Impatiens henslowiana* தாவரத்தின் 50 வெட்டுக்கள் *Knrickia walkeri* தாவரத்தின் 20 வெட்டுக்கள், *Chirita hybrid* தாவரத்தின் 50 வெட்டுக்கள் *Balsam sp.* தாவரத்தின் 20 வெட்டுக்கள் ஆய்வு கூட தாவர இனப்பெருக்கத்துக்கு உட்படுத்தப்பட்டன.

**தாவர உற்பத்தி**

விற்பனைக்காகவும் , பூங்காக்களில் நில அலங்காரத்துக்காக பயன்படுத்தவும் உயர் ரக உள்ளகத் தாவரங்கள் அந்தூரியம், ஓக்கிட் மற்றும் ஜேபரா தாவரங்களின் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. உள்ளூர் தாவர விற்பனைளுக்கு பெறுமதி சேர்க்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.





அந்தூரியம் கலப்பு இனங்கள் ⮙⮛





விதை மூலம் உருவாக்கப்பட்ட 3450 கன்றுகளும் 475 ஓக்கிட்களும் 508 ஓக்கிட் சாடிகளும் 38695 ஓக்கிட் தாவரங்களும் உற்பத்தி செய்யப்பட்டன. மேலும் இலைத் தாவரங்கள் 42945 உம், 940 ஜேபரா தாவரங்களும் 50 நீர்த் தாவரங்களும் உற்பத்தி செய்யப்பட்டு பூங்காக்களுக்கு வழங்கப்பட்டன. மேலும் 6970 அந்தூரியம் கன்றுகளும் திசு உருவாக்கம் செய்யப்பட்ட 5130 அந்தூரியம் கன்றுகளும் உற்பத்தி செய்யப்பட்டன. வேறு தாவர வகைகள் 540 திசு உருவாக்க முறையில் உற்பத்தி செய்யப்பட்டன. மேலும் பூங்காக்களின் விற்பனை நிலையங்களில் விற்பதற்காக 33356 தாவரங்கள் வழங்கப்பட்டன.



⮙⮚அம்பாந்தோட்டை உலர் வலய தாவரவியல் பூங்காவில் நிழல் இல்லம் அமைத்தல்



**தேசிய தாவரவியல் பூங்காக்களின் பூச்செடியியல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்.**

**கம்பஹா தாவரவியல் பூங்கா**

அந்தூரியம் மற்றும் ஓக்கிட் (டென்ட்ரோபியம்) தாவரங்களின் நுண் தாவரங்களை உருவாக்குவதற்கான திசு உருவாக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

பன்னத்தாவரம், ஜேபரா மற்றும் நீர்த் தாவரச் சேகரிப்பு என்பவற்றுக்கான பொதுப்பேணுகை மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வுகூடத்திலிருந்து வெளியிடப்பட்ட விதைகளிலிருந்து உருவாக்கப்பட்ட ஓக்கிட்களிலிருந்து 538 பூச்சாடிகள் உருவாக்கப்பட்டன. அவற்றில் 80 சாடிகளும் 2” தனியார் சாடிகள் 58 உம் 249 ஜேபரா தாவரங்களும் 45 பூக்களும் விற்கப்பட்டன.

உயிரியல் பல்வகைமை மற்றும் தாவரவியல் பூங்காக்களின் செயற்பாடுகள் பற்றிய கல்வி நிகழ்ச்சிகள் 11 ஆசிரியர்களும் 141 மாணவர்களுக்கும் நடாத்தப்பட்டன.

ஜேபரா, அந்தூரியம், ஓக்கிட் மற்றும் இலைத் தாவரங்களின் பயிர்ச்செய்கை குறித்து முறையே 75, 562, 245, 389, பேர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இவ்வருடத்தின் முதல் அரைப்பாகத்தில் வரட்சிக்காலநிலை காரணமாக கம்பஹா தாவரவியல் பூங்காவில் ஜேபரா தாவரங்கள் ஒரு வகை பீடைகளின் கடுமையான தாக்கத்துக்கு உட்பட்டன.

விதை மூலம் உருவாக்கப்பட்ட 3450 கன்றுகளும் 475 ஓக்கிட்களும் 508 ஓக்கிட் சாடிகளும் 38695 ஓக்கிட் தாவரங்களும் உற்பத்தி செய்யப்பட்டன. மேலும் 42945 இலைத் தாவரங்களும் 940 ஜேபரா தாவரங்களும் 50 நீர்த் தாவரங்களும் உற்பத்தி செய்யப்பட்டு பூங்காக்களுக்கு வழங்கப்பட்டன. 6970 அந்தூரியம் கன்றுகளும் 5130 திசு உருவாக்கம் செய்யப்பட்ட அந்தூரியம் தாவரங்களும் திசு உருவாக்கம் செய்யப்பட்ட வேறு வகை தாவரங்கள் 540 வும் உற்பத்தி செய்யப்பட்டன.

**உலர்வலய தாவரவியல் பூங்கா – அம்பாந்தோட்டை**

நிழல் இல்லங்கள் அனைத்தும் நிர்மாணித்து நிறைவு செய்யப்பட்டு தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட 3500 ஓக்கிட்கள் சாடியிலிடப்பட்டன. 500 க்கு மேற்பட்ட உள்ளக அலங்காரத் தாவரங்கள் மீள் சாடியிடப்பட்டதோடு வெட்டுக்கள் மூலம் 170 அலங்காரத் தாவரங்கள் இனப் பெருக்கம் செய்யப்பட்டன.

அந்தூரியம் வளர்ப்புக்கான நாற்று மேடைகள் நிர்மாணிக்கப்பட்டதோடு அவை நடப்பட்டு பூச்செடியியல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பிரதேசத்தின் நில வடிவமைப்புப் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டன. அந்தூரியம் ஓக்கிட மற்றும் இலைத் தாவரங்களை வளர்ப்பதற்காக



⮝ பூ வளர்ப்போருக்கான செயலமர்வொன்று

நிர்மாணிக்கப்பட்ட நிழல் இல்லங்களின் பேணுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதோடு தாவரங்களும் நடப்பட்டன.

இவ்வருடத்தின் பின்னரைப் பகுதியில் அம்பாந்தோட்டை தாவரவியல் பூங்காவில் அந்தூரியம் தாவரங்களைத் தாக்கும் கடுமையான பக்றீரியா தாக்கம் ஒன்று ஏற்பட்டது.

**கல்வி மற்றும் பயிற்சி**

அந்தூரியம், ஓக்கிட், ரோஸா, ஜேபரா, வெட்டுப் பூக்கள் ஆகியன வளர்ப்பது தொடர்பில் பூ வளர்ப்பில் ஈடுபடுவோரது அறிவையும் திறமைகளையும் மேம்படுத்தும் நோக்கில் பயிற்சி நிகழ்ச்சிகளும் செயலமர்வுகளும் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வகையில் ஓக்கிட் வளர்ப்பு பற்றி 1170 பூ வளர்ப்போருக்கும் அந்தூரியம் வளர்ப்பு பற்றி 1875 பேருக்கும் இலைத் தாவர வளர்ப்பாளர்கள் 1120 பேருக்கும் ஜேபரா வளர்ப்பு பற்றி 185 பேருக்கும பயிற்சிகள் வழங்கப்பட்டன. அத்தோடு 64 பேருக்கு திசு உருவாக்கம் பற்றிய பயிற்சியும் வழங்கப்பட்டது.

சிறு கைத்தொழில்கள் திணைக்களத்தோடு இணைந்து மாத்தளையில் கிரீன் நெட் பிளான்ட்ஸ் நிறுவனத்தில் ஓக்கிட் வளர்ப்பு பற்றி 20 வளர்ப்பாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

குறுதெனிய கல்வி பயிற்சி நிலையத்தில் 50 பேருக்கு இலைத்தாவர வளர்ப்பு பற்றிய பயிற்சி நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டது.

ரஜரட்ட பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 20 மாணவர்களுக்கு அந்தூரியம், ஓக்கிட் மற்றும் இலைத் தாவர வளர்ப்பு பற்றிய பிரயோக கற்கையொன்று வழங்கப்பட்டது.

வட மேல் மாகாணத்தைச் சேர்ந்த 20 பூ வளர்ப்போருக்கு வெட்டுத் தாவரங்கள் மற்றும் அந்தூரியம் தாவரங்களின் அறுவடைக்கு முன்னரும் பின்னரும் கையாள வேண்டிய நுட்பங்கள் குறித்து ஒரு விரிவுரை நடாத்தப்பட்டது. ஏற்றுமதி அபிவிருத்தி சபையால் அது ஏற்பாடு செய்யப்பட்டது.

புதிதாக பதவியில் இணைத்துக் கொள்ளப்பட்ட இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் 120 பேருக்கு அவர்களது சேவை திசை முகப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக தேசிய மற்றும் சர்வதேச பூச்செடியியல் கைத்தொழிலின் இன்றைய நிலை என்ற தலைப்பில் விரிவுரைகள் நடாத்தப்பட்டன.

பேராதனை தாவரவியல் பூங்காவால் வெளி நிறுவனங்கள் பலவற்றில் 165 தனி நபர்களுக்கு அலங்காரத் தாவரங்கள், ஓக்கிட்கள் வளர்ப்பது குறித்து மூன்று பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

விவசாய கல்லூரியைச் சேர்ந்த 28 மாணவர்களுக்கு பூச்செடியியல் தாவர வளர்ப்பு பற்றி தமிழ் மொழி மூலம் ஒரு விரிவுரை நடாத்தப்பட்டது.

அந்தூரியம் மற்றும் ஓக்கிட் வளர்ப்பு பற்றி விவசாய திணைக்கள அலுவலர்கள் 35 பேருக்கு இரத்தினபுரியில் சேவைக்கால பயிற்சி நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டது. மேல் மாகாண விவசாய திணைக்களத்தைச் சேர்ந்த 25 அலுவலர்கள் பொம்பாவெல ISTI பயிற்சி நிலையத்தில் ஓக்கிட் அந்தூரியம மற்றும் ஜேபரா வளர்ப்பு பற்றி பயிற்றுவிக்கப்பட்டனர். மேலும் கன்னொருவ ISTI பயிற்சி நிலையத்தில் விவசாய திணைக்களத்தைச் சேர்ந்த 20 அலுவலர்களுக்கு "பூச்செடியியல் தாவரங்களுக்கான திசு உருவாக்க நுட்பங்கள்" என்ற தலைப்பில் ஒரு விரிவுரை நடாத்தப்பட்டது.

பேராதனை தாவரவியல் பூங்காவில் மூன்று மாத பயிற்சி

நிகழ்ச்சியை தொடரும் மாணவர்களுக்கு ஓக்கிட், அந்தூரியம், இலைத்தாவரங்கள், அலங்காரத் தாவரங்கள் மற்றும் ஜேபரா வளர்ப்பு பற்றியும் பூச்செடியியல் தாவரங்களுக்கான பீடை மற்றும் நோய் கட்டுப்பாடு பற்றியும விரிவுரைக ள் நடாத்தப்பட்டன.

ஹக்கல தாவரவிய்ல பூங்காவில் 40 பங்கேற்பாளர்களுக்கு ஓக்கிட், இலைத் தாவரங்கள், அந்தூரியம் மற்றும் ஜேபரா வளர்ப்பு பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. நாளந்தா மாவட்ட பயிற்சி நிலையத்தில் 30 பங்கேட்பாளர்களுக்கு ஓக்கிட் மற்றும் இலைத்தாவர வளர்ப்பு பற்றி பயிற்சியளிக்கப்பட்டது. “லங்கா தீப” “சிறிகத” ஆகிய செய்திப் பத்திரிகைகளில் ஓக்கிட்கள் பற்றி 18 கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன.

## பிரசுரங்கள்

04 செய்தி மடல்களில் ஒவ்வொன்றும் 4000 பிரதிகளும் 11 வித்தியாசமான தலைப்புக்களிலான பிரசுரங்கள் ஒவ்வொன்றும் 1000 மும் முறையே இலவச விநியோகத்துக்காகவும், விற்பனைக்காகவும் பிரசுரிக்கப்பட்டன. (Aglaonema, Cannas, Chrysanthemum, Roses, Oncidium, Foliage Anthuriums, Potted Anthuriums, Dahlia, Calathea & Maranta, *Dracaena sanderiana*, Bromeliads)

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பூச்செடியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் என்ற புத்தகம் அச்சிட்டு வெளியிடப்பட்டது. அந்தூரியம், ஓக்கிட் மற்றும் டேலியா வளர்ப்பு பற்றிய புத்தகங்கள் திருத்தப்பட்டு புதிய தகவல்களும் சேர்க்கப்பட்டு மீள் பிரசுரத்துக்காக தயார்படுத்தப்பட்டுள்ளன. பூச்செடியியல் கைத்தொழிலில் முக்கியத்துவம் பெறும் 25 வித்தியாசமான தாவரங்களின் வளர்ப்பு பற்றிய கருத்துக்களை உள்ளடக்கி திணைக்களத்தின் பணியாளர்களால் பத்திரிகைகளுக்கு எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிடுவதற்கான பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.



பூச்செடியியல் பற்றிய பிரசுரங்கள் ➢

செய்தி மடல்கள் ⮛





### ஆலோசனை சேவைகள்

வர்த்தக பூச்செடியியல், நாற்று மேடை முகாமைத்துவம், பீடை மற்றும் நோய் கட்டுப்பாடு ஆய்வு கூடத்தில் தாவர இனப் பெருக்கம் செய்தல் என்பன குறித்து 511 தனிநபர்களுக்கு இலவச ஆலோசனை வழங்கப்பட்டது. அவர்களில் தமது பாடசாலை செயற் திட்டங்களுக்காக எம்மை அணுகிய பாடசாலை மாணவர்களும் அடங்குவர்.

- பூ வளர்ப்போருக்கான பயிற்சி நிகழ்ச்சியொன்று.
- ‘‘சுவஹஸ் மல்’’ திட்ட பூ வளர்ப்பாளர் ஒருவரது விற்பனை நிலையம்.



### தேசிய பூச்செடியியல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (சுவஹஸ் மல் நிகழ்ச்சித் திட்டம்)

2005 இல் நாட்டின் பூச்செடியியல் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட சுவஹஸ் மல் நிகழ்ச்சித் திட்டம் இவ்வருடத்திலும் தொடரப்பட்டு சிறு மற்றும் நடுத்தர பூச்செடியியல் நாற்று மேடையாளர்கள் பூ வளர்ப்போர் ஆகியோரை பலப்படுத்தி அவர்களது பொருளாதார அந்தஸ்தை உயர்த்துவதே இதன் நோகக்மாகும். 97 சுவஹஸ் மல் பூ வளர்ப்போர் சங்கங்கள் செயற்றிறனுடன் இயங்குகின்றன. அவற்றின் விபரம் வருமாறு : புத்தளம் - 06, கண்டி -07, மாத்தளை – 08, கம்பஹா – 27, கேகாலை – 17, நுவரெலியா – 09, களுத்துரை , ஊவா, அம்பாந்தோட்டை – 05, பதுளை -06, களுத்துரை -06, பளாங்கொடை -01, குருநாகல் -01, மொனராகலை – 01, கொழும்பு -03

374 மாதாந்தக் கூட்டங்களுக்கு எமது அலுவலர்கள் சமூகமளித்தனர். மேலும் 609 களப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு பூ வளர்ப்போரது பிரச்சினைகளுக்கு தீர்வாலோசனைகள் வழங்கப்பட்டன.

கம்பஹா, கண்டி, மாத்தளை, புத்தளம், கேகாலை, அம்பாந்தோட்டை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 834 பூ வளர்ப்போருக்கு பூச்செடியியல் குறித்த செயலமர்வுகள் 24 நடாத்தப்பட்டன.



பூ வளர்ப்போரது சந்தைப்படுத்தல் ஆற்றல்களை மேம்படுத்தும் பொருட்டு சிறு கண்காட்சிகள் 83 ம், மாவட்ட மட்ட பெரிய கண்காட்சிகள் 14 ம் நடாத்தப்பட்டன.

நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் பூ வளர்ப்போருக்கு புதிய இனங்களைச் சார்ந்த, தரமுயர்ந்த தாய்த் தாவரங்கள் சலுகை விலைக்கு வழங்கப்பட்டன. (ஜேபரா - 15700 , கார்னேஸன் - 1000, ஜிப்ஸோபிலா – 1500, ஓக்கிட் - 16900) கண்காட்சிகளில் பயன்படுத்தவன 10X10 அடி கொண்ட வர்ண கெனபி கூடாரங்கள் 100 கொள்வனவு செய்யப்பட்டன.

கம்பஹா, கேகாலை மற்றும் அம்பாந்தோட்டைப் பகுதிகளைச் சேர்ந்த சுவஹஸ்மல் சங்கங்களின் பூ வளர்ப்போர் வேறு பிரதேசங்களின் நன்கு பராமரிக்கப்படும் நாற்று மேடைகளை பார்க்கவென களப் பயணங்களில் அழைத்துச் செல்லப் பட்டனர்.



➢ “சுவஹஸ் மல்” திட்ட பூ வளர்ப்பாளர் ஒருவரது நாற்று மேடை

➢ “சுவஹஸ் மல்” திட்டத்தின் கீழ் கொழும்பில் இடம் பெற்ற ஒரு கண்காட்சி

**சுவஹஸ்மல் செவன நாற்று மேடையும் விற்பனை நிலையமும்**

இது 2006 ஆம் ஆண்டு கொழும்பு டொரிங்டன் சதுககத்தில் இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள சுவஹஸ்மல் சங்கங்களைச் சேர்ந்த பூ வளர்ப்போரது உற்பத்திகளை விற்பனை செய்யும் நோக்கில் உருவாக்கப்பட்டது.

இந்த தாவர நாற்று மேடையும் விற்பனை நிலையமும் கொழும்பு நகரின் மீள் வடிவமைப்புக்காக பத்தரமுல்லயில் உள்ள ஜனகலா கேந்திரயவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

இந்நிலையமானது தரமுயர்ந்த தாவர உற்பத்திகளை விற்பனை செய்வதோடு நில வடிவமைப்பு ஒப்பந்தங்களையும் பொறுப்பேற்கிறது. மேலும் கண்காட்சிகளையும் தாவர விற்பனைகளையும் ஏற்பாடு செய்கிறது. இவ்வருடத்தில் 22046 தாவரங்களும் 4000 வெட்டுப் பூக்களும் விற்பனை செய்யப்பட்டு ரூபா 1.52 மில்லியன் வருமானமாக பெறப்பட்டது.

கம்பஹா மற்றும் கொழும்பு மாவட்டங்களைச் சேர்ந்த பூ வளர்ப்போரது உற்பத்திகளை விற்பனை செய்யும் நோக்கில் பெப்ரவரி மாதத்தில் இங்கு ஒரு பூக்கண்காட்சியும் விற்பனையும் இடம்பெற்றது.

இக்கண்காட்சியில் நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களைச் சேர்ந்த சுவஹஸ் மல் சங்கங்களின் பூ வளர்ப்போரது வெட்டுப் பூக்களும் இங்கு விற்பனை செய்யப்பட்டன.






- பூ வளர்ப்போருக்கு இரும்புக் குழாய்களை வழங்குதல்
- பூ வளர்ப்போருக்கு வளர்ப்பு சாதனங்களை வழங்குதல்
- பூ வளர்ப்போருக்கு நிழல் வலைகளை வழங்குதல்
- பூ வளர்ப்போரது நாற்று மேடைகள்





**பூச்செடியியல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம்**

கொழும்பு, கம்பஹா மற்றும் கேகாலை மாவட்டங்களில் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாக வெட்டுத்தாவரங்கள், அலங்காரத் தாவரங்கள் மற்றும் அந்தூரியம் வளர்ப்பை ஊக்குவிப்பதற்கான விஷேட பூச்செடியியல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.



⮙''லிய அபிமான'' திட்டத்தின் கீழ், சுய தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு அந்தூரியம் கன்றுகளை வழங்குதல்

மேற்படி மாவட்டங்களில் வெட்டுத் தாவர வளர்ப்பில் முதலீடு செய்ய விரும்பும் நபர்களிடமிருந்து, 50 : 50 என்ற அடிப்படையில் அரச உதவியுடனான முதலீட்டுத் திட்டத்துக்கான விண்ணப்பங்கள் சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மும்மொழிப் பத்திரிகைகளிலும் கோரப்பட்டன.

இச்செயற்திட்டத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களின் கீழ் நாற்று மேடைகளை அபிவிருத்தி செய்வது இதன் நோக்கமாகும்.

அனைத்து விண்ணப்பங்களும் ஆவணப்படுத்தப்பட்டு அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்த 395 பூ வளர்ப்போர் மேற்படி மூன்று மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்ச்சித் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்வதற்கான திசை முகப்படுத்தல் செயலமர்வுகள் மே மாதம் 11 ம் திகதி முதலாம் கட்டத்துக்கான வளர்ப்போருக்கும் நவம்பர் 23 ம் திகதி இரண்டாம் கட்டத்துக்கான வளர்ப்பாளர்களுக்கும் என ஏற்பாடு செய்யப்பட்டன. இவற்றில் ஏற்றுமதியாளர்களும் பங்கேற்றனர். வளர்க்கப்படவேண்டிய பயிர்களின் வகைகள் வளர்ப்பு முறைகள் மற்றும் தொழில் நுட்ப ரீதியான தகவல்கள் ஆகியன இவற்றில் பங்கேற்றோருக்கு வழங்கப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட பூ வளர்ப்போர் ஏற்றுமதியாளர்களுக்கும் அறிமுகப் படுத்தி வைக்கப்பட்டனர்.

*Dracaena sanderiana* தாவர வளர்ப்பு பற்றிய தகவல்கள் அடங்கிய பிரசுரம் ஒன்றும் இச்செயலமர்வின் போது விநியோகிக்கப்பட்டது. இச்செயலமர்வில் பங்கு பற்றிய ஒவ்வொரு நபரதும் தேவைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதோடு இந்நிகழ்ச்சித் திட்டம் பற்றி அபிப்பிராயம் தெரிவிக்க அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

நடுகைச் சாதனங்களையும் [*Polyscias* வகைகள், *Cordyline terminalis* வகைகள், *Dracaena sanderiana* Victory மற்றும் *Dracaena sanderiana* White, Crotons வகைகள், *Dracaena purple compacta* (DPC பிரம்பு) *Chrysalidocarpus lutescense* (பிரம்புப் பனை)] மேலும் பூ வளர்ப்போரிடையே விநியோகிப்பதற்கான நிழல் வலைகள் (60 மற்றும் 70 வீத நிழல்) ஆகியவற்றையும் கொள்வனவு செய்வதற்கான செய்தித்தாள் விளம்பரங்கள் சிங்களம், ஆங்கிலம், மற்றும் தமிழ் மொழிகளில்

வெளியிடப்பட்டு இப்பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு இத்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் பூ வளர்ப்போருக்கு விநியோகிக்கப்பட்டன.

கொள்வனவு செய்யப்பட்டு இத்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் பூ வளர்ப்போருக்கு விநியோகிக்கப்பட்டன. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்துக்கு தேவையான நிழல் வலைகள் மற்றும் GI கம்பிகள் ஆகியனவும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அவை 2012 இன் முதல் காலாண்டில் வளர்ப்போருக்கு விநியோகிக்கப்படும். இத்திட்டத்தின் காரணமாக 140 ஏக்கர் நிலம் பசுமை இலை உற்பத்திக்கு பயன்படுத்தப்படுவதோடு 20 மில்லியன் பசுமை இலைகள் ஒவ்வொரு அறுவடையின் போதும் இப்பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கம்பஹா மாவட்டத்தில் சுய தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களைப் பலப்படுத்துவதற்கான "லிய அபிமன்" நிகழ்ச்சித் திட்டம்.**

இத்திட்டத்தின் கீழ் கம்பஹா மாவட்டத்தில் 475 பெண்கள் அந்தூரியம் மற்றும் இலைத் தாவர உற்பத்தி பற்றி பயிற்றுவிக்கப்பட்டனர். இவர்களுக்குச் சொந்தமான தெரிவு செய்யப்பட்ட சில நாற்று மேடைகள் தரிசிக்கப்பட்டு கள ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பூ வள்ளப்போருக்கு 18000 அந்தூரியம் தாவரங்களும் 5000 இலைத் தாவரங்களும் 3X100m நிழல் வலைகள் 15 ரோல்களும் விநியோகிக்கப்பட்டன.

**பூச்செடியியல் ஆய்வு குறித்த தேசிய ஆய்வரங்கு (NaSFLOR)**

2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்கான பூச்செடியியல் ஆய்வு குறித்த தேசிய ஆய்வரங்குகளை விவசாய ஆய்வு கொள்கைக்கான இலங்கைச் சபையுடன் இணைந்து ஜனவரி மாதம் 25 ம் திகதியும் டிசம்பர் மாதம் 16 ம் திகதியும் முறையே இத்திணைக்களம் நடாத்தியது.

2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற ஆய்வரங்குளில் சமர்ப்பிக்கிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் பிரசுரிக்கபட்டு இவற்றில் விநியோகிக்கப்பட்டன.

2010 இன் ஆய்வரங்கில் 15 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. 2011 இன் ஆய்வரங்கில் 26 ஆய்வுக்கட்டுரைகளும் 02 சுவரொட்டிகளும் முன்வைக்கப்பட்டன. அவை நாட்டின் பல்வேறு திணைக்களங்களைச் சார்ந்த அதிகாரிகளினாலும் தனியார் துறை நிறுவனங்களாலும் பேராதனை, ஊவாவெல்லஸ்ஸ, ரஜரட்ட மற்றும் ருஹுன பல்கலைக்கழக மாணவர்களாலும் முன்வைக்கப்பட்டன.



**NaSFLOR ல் கலந்து கொண்டோர்**

**ஏனைய பணிகள்**

15000 க்கும் மேற்பட்ட டென்ட்ரோபியம், வன்டா, கெடிலியா, எபிடென்ட்ரா மற்றும் டொலம்மியா உறிஞ்சிகள் அனைத்துத் தாவரவியல் பூங்காக்களுக்குமாக (பேராதனை, கம்பஹா, அவிஸாவலை மற்றும் அம்பாந்தோட்டை)

தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன.

மத்திய, வட மத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் விவசாய திணைக்களங்களது மாகாண செயற்குழுக் கூட்டங்களுக்கு எமது அதிகாரிகள் சமூகமளித்து அம்மாகாணங்களின் பூச்செடியியல் தாவர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்து கலந்துரையாடினர்.

**அபிவிருத்திப் பணிகள்**

இவ்வருடத்துக்கென திட்டமிடப்பட்ட அனைத்து புதுப்பித்தல் மற்றும் நிர்மான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டன. (அதாவது ஓக்கிட் இல்லத்துக்கு மீள கூரையிடலும் வர்ணம் தீட்டலும் வளர்ந்த ஓக்கிட் தாவரங்களை 5 அங்குல சாடியில் வளர்ப்பதற்காக கண்ணாடி இல்லத்துக்கு மீள் கூரையிடலும் அதனை புதுப்பித்தலும், பேராதனை பூங்காவின் இலைத் தாவர பிரிவுக்கான வகுப்பறையும் கள அலுவலகமும் மற்றும் கம்பஹா பூங்காவில் ஜேபராவுகளுக்கான பொலி டனல் கூடாரங்கள்)

**அலுவலர்களின் பயிற்சி, இடமாற்றம் மற்றும் ஏனைய விடயங்கள்**

செல்வி கமலா மெனிக்கே அம்பாந்தோட்டை உலர் வலய தாவரவியல் பூங்காவுக்கும் அவிசாவலை ஈரவலய தாவரவியல் பூங்காவுக்கும், அந்தூரியம் செய்கையை ஆரம்பிக்கும் பொருட்டு விடுவிக்கப்பட்டார்.

செல்வி பீ.யூ.ஜீ.ஏ.கே.ஏ. ரனசிங்ஹ இந்தியாவின் பெங்களூர் சென்று மே மாதம் 17 ம் திகதி முதல் 22 ம் திகதி வரை இடம்பெற்ற ஐ.டப்லிவ்.எம்.ஐ. இன் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

செல்வி விக்ரமசிங்ஹ மக்கள் சீனக் குடியரசின் புஸோவூ நகரின் துணை அயன வலய பூக்கள் கற்கை நிலையத்தில் ஏப்ரல் 13 ம் திகதி முதல் மே மாதம் 24 ம் திகதி வரை நடைபெற்ற ‘வளர்ந்து வரும் நாடுகளுக்கான’ பூ உற்பத்தித் தொழில் நுட்பம் என்ற பயிற்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இது சீனாவில் வர்த்தக அமைச்சின் அனுசரனையின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

திரு. எம்.எம்.கே.பி. வெலிக்கும்புர அம்பாந்தோட்டை தாவரவியல் பூங்காவுக்கு ஜூன் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை இடமாற்றப்பட்டு இருந்து தற்போது பேராதனை பூச்செடிச் செய்கை அலகில் பணியாற்றுகிறார்.

செல்வி எல்.ஏ.பீ. பெரேரா மற்றும் செல்வி ஏ.என். அபேகோகன் ஆகியோர் நெதர்லாந்தில் தமது முதுவிஞ்ஞானமானி கற்கையை பூர்த்தி செய்த பின் திணைக்களத்தில் தமது கடமைகளை பொறுப்பேற்றனர்.

திரு. ஐ.டப்லிவ்.எம். கருனாரத்ன விவசாய திணைக்களத்தின் அலகின் கீழான சேவையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

**அலகின் பணியாளர்கள்**

| பெயர் | பதவி | நிலையம் / விடயம் |
|---|---|---|
| திரு. K.N. யாபா | பணிப்பாளர் (ஆய்வு,தொழில் நுட்பப் பரிவர்த்தனை) | |
| கலாநிதி. ஷெலோமி A. கிருஷ்ணராஜா | பிரதிப் பணிப்பாளர் (பூச் செடியியல் ஆய்வு) | |
| M.C. விக்ரமசிங்க | ஆய்வு உத்தியோகத்தர் | கம்பஹா தா.பூ / விவசாயவியல் |
| Ms.அனோமா போவத்த | ஆய்வு உதவியாளர் | கம்பஹா தா.பூ |
| திரு.யோகராஜா | ஆய்வு உதவியாளர் | நுண் தாவர உருவாக்கம் |
| Ms.M.O.R.V. பெரேரா | பிரதான முகாமைத்துவ உதவியாளர் | பூச் செடியியல் ஆய்வுப் பிரிவு - போரதனை |
| Ms.R.M. கமலா மெனிகே | விவசாய ஆலோசகர் | அந்தூரியம் |
| திரு.U.B. பலிபான | விவசாய மேற்பார்வை உத்தியோகத்தர் | நீர்த் தாவரம், ஜேர்பரா |
| Ms.K.A.C.N. செனெவிரத்ன | விவசாய மேற்பார்வை உத்தியோகத்தர் | அறுவடையின் பின்னரான பேணுகை, உயிரியல் பசளைகள் |
| திரு. M.M.K.P. வலிகும்புர | விவசாய ஆலோசகர் | இலைத் தாவரப் பகுதி |
| Ms.W.M.D.E.R. அந்த்ராதி | விவசாய ஆலோசகர் | ஓக்கிட் |
| Ms.I.H.C.N. சமன்திகா | விவசாய ஆலோசகர் | இலைத் தாவரப் பகுதி |
| Ms.M.A.N. ஜயவர்தன | விவசாய ஆலோசகர் | சுவஹஸ் மல்- கம்பஹா |
| திரு. D.V.R.A. பெரேரா | விவசாய ஆலோசகர் | சுவஹஸ் மல்- கம்பஹா |
| Ms.H.M.R. ஹேரத் | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | திசு உருவாக்கம் |
| Ms.M.K. ரூபசிங்க | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | தாவர இனப்பெருக்கம் |
| திரு. I.W.M. கருணாரத்ன | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | சுவஹஸ் மல்- புத்தளம் |
| திரு. R.A.S. பெரேரா | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | சுவஹஸ் மல்- கண்டி |
| Ms.A.N. அபேகோன் | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | பீடை, நோய்க் கட்டுப்பாடு |
| Ms.L.A.P. பெரேரா | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | விவசாயவியல், அறுவடையின் பின்னரான பேணுகை |
| Ms.M. உத்பலவர்ணா | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | சுவஹஸ் மல்- கேகாலை |
| Ms.K.A.S. திலகரத்ன | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | சுவஹஸ் மல்- கேகாலை |
| திரு. R.A.S. பியசேன | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | சுவஹஸ் மல்- ஹக்கல |
| Ms.A.P. சிரிவர்தன | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | சுவஹஸ் மல்- கம்பஹா |
| Ms.A.N. நாணயக்கார | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | சுவஹஸ் மல்- கம்பஹா |
| Ms.B.U.G.A.K.N. ரணசிங்க | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | கம்பஹா தா.பூ |
| திரு. R.A.M.I. ரத்னாயக | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | திசு உருவாக்கம், நீர்த் தாவரம், ஜேர்பரா- கம்பஹா தா.பூ |
| Ms.H.M.P. பீரீஸ் | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | சுவஹஸ் மல்- உலர் வலய தா.பூ |

**தேசிய தாவரக்கயம்**

இலங்கையினதும் மற்றும் வெளிநாடுகளதும் தாவரங்களின் உலர்ந்த தாவரவியல் கூட மாதிரிகளை முறையான ஆய்வுகளுக்காக பாதுகாத்து வைக்கும் இடமே தேசிய தாவரவியல் கூடமாகும்.

இங்கு 148,000 க்கும் அதிகமான தாவரவியல்கூட மாதிரிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. அத்தோடு தாவரங்கள் பற்றிய 3500 க்கும் மேற்பட்ட புத்தகங்களும் சஞ்சிகைகளும் இதன் நூலகத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

தாவரக் கண்டுபிடிப்பு, அடையாளம் காணல், மாதிரி தயாரித்தல், ஆவணப்படுத்தல் மற்றும் நாட்டின் தாவரச் செல்வத்தை மீள் பரிசீலித்தல் ஆகிய பணிகளை தேசிய தாவரவியல் கூடம் மேற்கொள்கிறது. உணவு மற்றும் விவசாய தேவைகளுக்கான தாவர வளங்களை கணக்கெடுப்பதன் மூலமும் பதிவு செய்வதன் மூலமும் இந்நிறுவனமானது நாட்டின் தேசிய அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்புச் செய்கிறது.

இந்நிறுவனமானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆய்வாளர்களுக்கு தாவரங்களை வகைப்படுத்துதல் தொடர்பான ஆய்வுப் பணிகளுக்கு வசதி செய்து கொடுப்பதோடு தாவர மற்றும் தாவரப் பொருள்களை ஏற்றிறக்குமதியின் போது எழும் சட்டப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சுங்கத் திணைக்களத்துக்கு உதவுகிறது. அண்மையில் இந்நிறுவனமானது, இலங்கையின் தாவரங்களை சிவப்புப் பட்டியல் இடும் அதிகார சபையாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. தேசிய தாவரவியல் கூடமானது உலகின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த தாவரவியல் ஆய்வு நிறுவனங்களுடன் அறிவையும் தாவர மாதிரிகளையும் பரிமாறிக் கொள்ளும் பணியிலும் ஈடுபட்டுள்ளது.



**தாவரக் கண்டாய்வும் பூச்செடியியல் ஆய்வும்**

***களக்கண்டறிதல்***

அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள மற்றும் அரிதான



- செவன் வேர்ஜின் மலைகள்
- தாவரக்கயச் சேமிப்பு செறிவாக்க அட்டவணை
- செவன் வேர்ஜின் மலைகளில் சேகரிக்கப்பட்ட *Impatiens* sp.

தாவரங்களை அடையாளம் காண்பதன் மூலமும் மற்றும் வெளிவாரி தாவரப் பேணுகை செயன்முறைகள் மூலமும் மற்றும் பொருளாதார இயலுமை கொண்ட தாவரவகைகளை நிலைபேற்றுத் தன்மையுடன் பயன்டுத்துவதற்கும் தாவரங்கள் பற்றிய தகவல்களை சேகரித்து உயரியல் பல்வகைமை பேணுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் தாவரக் கண்டாய்தல் நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

| Type of collection | Source | No of specimens / slides | | Enrichment |
|---|---|---|---|---|
| | | Prepared | Verified and added | |
| ***Higher plants*** | Field exploration at Ambuluwawa 2009 | 30 | 30 | NH-PDA |
| | Collection of Dr M. Jayasuriya (Kalaoya & other places) | | 77 | NH-PDA |
| | Collection of Dr. M. Jayasuriya and Mr. S. Fernando from Kokagala and other places | | 177 | NH-PDA |
| | Collection of Mr. S. Fernando at Doluwakande | | 34 | NH-PDA |
| | Collection of Prof. S. Gunatilleke | | 452 | NH-PDA |
| | Field Explorations Kithulgala, Dolosbage, Dolukande- 2010 | 36 | 36 | NH-PDA |
| | Collection from R.B.G. *Alphonsea hortensis* & *Memecylon macrocarpum* | 7 | 7 | NH-PDA |
| ***Gymnosperms*** | Collection of Botany Special students from RBG | 41 | 41 | NH-PDA |
| ***Ferns*** | Collection of R.H.G.Ranil (*Cyathea* sp.) | 43 | 43 | NH-PDA |
| | Voucher specimens of Fern Flora Revision | 33 | 33 | NH-PDA |
| ***Mosses*** | Field exploration in Gannoruwa 2008 | 15 | 15 | NH-PDA |
| | Field exploration at Adam's Peak 2011 | 40 | 40 | NH-PDA |
| | Field exploration in Horton Plains - 2008/2010 | 90 | 90 | NH-PDA |
| | Field exploration in Seven Virgin Hills | 85 | 85 | NH-PDA |



ஆதமின் மலை மோரே பகுதியில் ஒரு நாள் மேற்கொள்ளப்பட்ட களக்கண்டாய்வின் போது உயர்தாவரங்கள் 65 உம், பன்னத் தாவரங்கள் 07 உம், பாசித் தாவரங்கள் 40 உம் சேகரிக்கப்பட்டன. உடுதும்புர பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஒரு நாள் களப் பயணத்தின் போது வித்து மூடியுளிகள் 40 உம், பாசித்தாவரங்கள் 15 உம் சேகரிக்கப்பட்டன. செவன் வேர்ஜின் ஹில் மற்றும் ஹோடன் சமவெளி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட களப் பயணத்தின் போது வித்து மூடியுளிகள் 48 உம், பன்னத் தாவரங்கள் 16 உம், பாசித் தாவரங்கள் 155 உம் சேகரிக்கப்பட்டன. அத்தோடு ஹந்தானயிலிருந்து 100 உயர் தாவரங்களும் 10 பன்னத் தாவரங்களும் அநுராதபுரத்திலிருந்து 25 நீர்த் தாவரங்களும் சேகரிக்கப்பட்டன. 2011 ஜுன் மாதத்திற்குப் பிறகு ரிடிகலயிலிருந்து 19 வித்து மூடியுளிகளும் ஹோடன் சமவெளிகளிலிருந்து 18 வித்து மூடியுளிகளும் சிங்கராஜ வனத்திலிருந்து 53 வித்து மூடியுளிகளும் சேகரிக்கப்பட்டன.

***தாவரக் கண்டறிதல்கள் மூலம் தாவரக் கயத்தை அடையாளம் காணலும் வளப்படுத்தலும்***

களக் கண்டாய்வுகள் மூலம் சேகரிக்கப்பட்ட மாதிரிகள் அடையாளம் காணப்பட்டு வகைப்படுத்தப்பட்டு மாதிரி சிலைட்கள் தயாரிக்கப்பட்டு தேசிய தாவரக்கய சேகரிப்பு வளப்படுத்தப்பட்டது.





- விழிப்பூட்டல் நிகழ்ச்சியொன்று
- உள்ளகப் பயிற்சி மாணவர்களின் ஹந்தான களப் பயணம்

**நூலக சேகரிப்பை வளப்படுத்துதல்**

பின்வரும் நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு உசாத்துணை நூலகம் மேம்படுத்தப்பட்டது :

Mosses of eastern Indian and adjacent regions by H.C. Gangulee (3 volumes), A Compendium of the Macrolichens from India, Nepal and Sri Lanka by D.D. Awasthi, Indian Lichens: An Annotated Checklist by K.P. Singh and G.P. Sinha, The Flora of Gulf of Mannar by P.Danie, Taxonomic Revision of Three Hundred Indian Sub continental Pteridophytes with a Revised Census List A new picture of fern-taxonomy and nomenclature in the Indian Subcontinent by C.R. Fraser-Jenkins.





**தாவரவியல் தகவல்களை உத்தரவாதப்படுத்தலும் விநியோகித்தலும்**

தாவரங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய விடயங்கள் குறித்து மிகச் சரியான தாவரவியல் தகவல்கள் பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் அரச, தனியார் நிறுவனங்களுக்கும் தேவைக்கேற்ப வழங்கப்பட்டன.

**வருகை தந்தோருக்கும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுனக்கும் வழங்கப்பட்ட தகவல்கள்**

பாடசாலை மாணவர்கள் பல்கலைக் கழக மாணவர்கள் உட்பட 1628 பேர் தாவரக்கயத்தை தரிசித்து அதன் நடவடிக்கைகளை அவதானித்து தாவரக்கய தொழில்நுட்பங்கள் மற்றும் முகாமைத்துவம் குறித்து அறிவு பெற்றுக் கொண்டனர். அவர்களுள் 15



⮝ உடதும்பர பகுதியின் அரிய *Sonerila* வகைகள்

⮜ களக்கண்டாய்வுகளின் போது சேகரிக்கப்பட்ட பாசித் தாவரங்கள்

⮟ உடதும்பர பகுதியின் வீதி ஓரங்களிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட அரிய *Mangifera zeylanica plant*



வெளிநாட்டவர்களும் அடங்குவர். பொது மக்கள் மற்றும்





பேராதனை தாவரவியல் பூங்காவில் ஒலியமைப்புப் பதிவு

⮙ *Sophora violacea*

⮛ *Syzygium firmum*

ஏனையோரால் வினவப்பட்ட தாவரவியல் தகவல்கள் குறித்து விடையளிப்பதற்காக 130 கடிதங்கள் அனுப்பப்பட்டன.

விவசாய திணைக்களத்தின் தாவரவியல் சட்ட ஆய்வுப் பிரிவுக்கு, இறக்குமதி அனுமதிப் பத்திரம் வழங்கும் பொருட்டு 15 தாவரங்கள் பற்றிய தகவல்கள் வழங்கப்பட்டன.

பொதுமக்களுக்காகவும் களப் பயணங்களிலிருந்தும் 1822 உயர் தாவரங்களும் 230 பாசித் தாவரங்களும் 85 பன்னத் தாவரங்களும் அடையாளம் காணப்பட்டன.

திருமதி ஆர்.ஏ.டப்லிவ். ரனசிங்ஹ தெல்தெனிய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகி *Polownia – Tomentosa* தாவர வகையை VRR பாதுகாப்பகத்துக்கு அறிமுகப்படுத்துதல் தொடர்பாக வழங்கப்பட்ட தாவரவியல் சான்று குறித்து சாட்சியமளித்தார்.

*Andrographis paniculata* var. *glandulosa* தாவரத்தின் 4 மாதிரிகள் / படங்கள் இலத்திரனியல் கடனாக இந்தியாவின் தாவரவியல் கணக்கெடுப்புக்கு வழங்கப்பட்டன.

### ***தாவரக் கயத்தில் வவ்சர் மாதிரிகளை சான்றுப்படுத்தலும் வைப்பிலிடலும்***

ஹெட்டிகொட தனியார் நிறுவனத்துக்காக மூலிகைத் தயாரிப்பு ஆய்வுக்கென 41 தாவர வகைகள் சான்றுப்படுத்தப்பட்டன.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழக மாணவர்கள் இருவரது இரசாயண பிரித்தெடுக்கை ஆய்வுகளுக்காக 15 தாவரங்கள் சான்றுப்படுத்தப்பட்டன.

பேராதனை பல்கலைக் கழக மருந்தக திணைக்கள இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தைச் சேர்ந்த இறுதி வகுப்பு மாணவர்களுக்கு இரசாயணப் பிரித்தெடுக்கை ஆய்வுக்காக 9 தாவரங்கள் சான்றுப்படுத்தப்பட்டன.

ஹந்தான IFS நிறுவனத்துக்காக இரசாயண பிரித்தெடுக்கை ஆய்வுகளுக்காக 3 தாவர மாதிரிகள் சான்றுப்படுத்தப்பட்டன.

அவ்வாறே சிறி ஜயவர்தனபுர பல்கலைக் கழக மருத்துவ விஞ்ஞான பீடத்தின் மருத்துவ இரசாயண விஞ்ஞான பட்டப் பின்படிப்பு ஆய்வொன்றுக்காக தாவர மாதிரியொன்று சான்றுப்படுத்தப்பட்டது. மேலும் கொழும்பு பல்கலைக் கழக இரசாயணவியல் பீடத்தின் நுண்ணங்கி எதிர்ப்பு பற்றிய பட்டப் பின்படிப்பு ஆய்வொன்றுக்காக 33 பன்னத்தாவர மாதிரிகள் சான்றுப்படுத்தப்பட்டன.

கொழும்பு பல்கலைக் கழக இரசாயணவியல் திணைக்கள கைத்தொழில் தொழில் நுட்ப நிறுவகத்தில் மூலிகைத் தொழில்நுட்பப் பிரிவின் ஆய்வுப்

பணிகளுக்காகவும், கைத்தொழில் பயிற்சி நிறுவகத்தின் உணவுத் தொழில்நுட்பப் பிரிவின் ஆய்வுப் பணிகளுக்காகவும் 7 தாவர மாதிரிகள் சான்றுப்படுத்தப்பட்டன.

கொழும்பு பல்கலைக் கழக உள்நாட்டு மருத்துவ நிறுவகத்தின் மூலிகைப் பிரித்தெடுக்கை ஆய்வுகளுக்காகவும் தாவர மாதிரியொன்று சான்றுப்படுத்தப்பட்டன.

**பயிற்சி மற்றும் கல்வி**

***கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள்***

தாவரக் கண்டாய்தல், அடையாளம் காணல், பெயரிடல், தாவரக் கய முகாமை, உயிரியல் பல்வகைமை மற்றும் பேணுகை பற்றி பயிற்சி நிகழ்ச்சிகளும் விரிவுரைகளும் நடாத்தப்பட்டன.

தாவரக்கயத்தின் வரலாறு, தாவரக் கண்டாய்தல் மற்றும் தாவரக்கய நுட்பங்கள் பற்றி இலங்கை வனஜீவராசிகள் திணைக்களம், இலங்கை கள தாவரவியலாளர் சங்கம், இலங்கை வன நிறுவகம் (நுவரெலியா), இளம் விலங்கியலாளர் சங்கம், விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம், உள்நாட்டு மருத்துவம் மற்றம் யூனானி நிறுவகம், மாதுரு ஓய விஷேட படைப் பயிற்சிப் பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள், பாடசாலை மற்றும் பல்கலைக் கழக மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட 1209 பேருக்கு 25 ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. இதில் பேராதனை தாவரவியல் பூங்காவில் நிலவடிவமைப்பு மற்றும் பூச்செடியியல் பற்றிய மூன்று மாத கற்கை நெறியை பயிலும் மாணவர்களும் உள்ளடங்குவர்.

தாவர வகைப்படுத்தல் மற்றும் உயிரியல் பல்வகைமை குறித்து பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 215 பேருக்கு ஒரு நாள் விரிவுரை நிகழ்ச்சிகள் 6 நடாத்தப்பட்டன.

***உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சிகள்***

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அலுவலர்கள் / மாணவர்களுக்கு பல விஷேட உள்ளக பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு தாவரக்கய பாவணை குறித்த பயிற்சி வழங்கப்பட்டது.

ஜேர்மனைச் சேர்ந்த ஒரு பல்கலைக்கழக மாணவருக்கு தாவரக் கயம் மற்றும் அரச தாவரவியல் பூங்கா ஆகியவற்றின் நடவடிக்கைகள் பற்றிய ஒரு வார உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டது.

தேசிய தாவரக்கயத்தின் தாவர சேமிப்பை வளப்படுத்தும் பொருட்டு சிறி ஜயவர்தனபுர பல்கலைக் கழக வனத்துறை மற்றும் சூழல் விஞ்ஞானமானி மாணவர் ஒருவருக்கு ஒரு வருட கால உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டது.

பேராதனை அரச தாவரவியல் பூங்காவில் பூச்செடிச் செய்கை மற்றும் நில அலங்கார பூங்காவியல் உயர் தேசிய டிப்ளோமா கற்கையை பயிலும் மாணவர்கள் இருவர் தாவரக்கய நுட்பங்கள் மற்றும் முகாமை பற்றிய மூன்று மாத பணியமர்த்துகை நிகழ்ச்சி திட்டத்தை தேசிய தாவர கயத்தில் தொடர்ந்தனர்.

பேராதனை பல்கலைக் கழக தாவரவியல் திணைக்கள விஷேட கற்கை மாணவர்கள் 11 பேர் ஹந்தான மலைத் தொடரின் அழிவுக்குட்பட்டுள்ள மற்றும் அரிய தாவர மாதிரிகளையும் ஹந்தான தாழ் நில புல்மாதிரிகளையும் சேகரித்து தேசிய தாவரக் கயத்தில் வைப்பிலடப்பட்டுள்ள வகை மாதிரிகள் குறித்த தகவல்களை தொகுப்பதற்கும் புல் வழிகாட்டல் நூலொன்றை தயாரிப்பதற்குமாக வாய்ப்பளிக்கப்பட்டு, தாவரக் கயத்தில் வைப்பிலடப்பட்டுள்ள வகை மாதிரிகள் பற்றிய நூலொன்றை வெளியிட வழிகாட்டப்பட்டனர்.

பேராதனை அரச தாவரவியல் பூங்காவின் ஒவ்வொரு பகுதியிலும் காணப்படும் எமது நாட்டுக்குரிய தாவர வகைகள் குறித்த மேலதிக தகவல்களை (மறைந்த தாவரங்கள், புதிதாக நடப்பட்ட தாவரங்கள், தாவரப் பெயர்கள் மற்றும் பெயர்ப் பலகைககளைத் திருத்துதல்) பெறுவதற்கும் அவற்றை மீள அமைப்பதற்கும் ஒரு கள கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. இதனை சப்ரகமுவ பல்கலைக் கழக விவசாய திணைக்கள மாணவர்கள் மூவர் இரண்டு வார கால உள்ளக நிகழ்ச்சித் திட்டமாக தேசிய தாவரக் கயத்தில் மேற்கொண்டனர்.

களனி பல்கலைக் கழக மாணவர்கள் மூவர் இலங்கையின் தாவரங்கள் என்ற நூலைப் பயன்படுத்தி படரும் தாவரங்கள் பற்றிய தரவுகளை ஒன்று திரட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இது ஒரு வார கால உள்ளக நிகழ்ச்சித் திட்டமாக அமைந்தது.

நேச்சர்ஸ் பியுடி கிரியேஸன்ஸ் நிறுவனத்தில் ஒரு தாவரக் கயத்தை அமைப்பது தொடர்பிலான ஐந்து நாள் விஷேட பயிற்சி நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டது. அத்தோடு அந்நிறுவனத்தைச் சேர்ந்த அலுவலர் ஒருவருக்கு மூலிகைகளை அடையாளம் காணல் பற்றிய பயிற்சியும் வழங்கப்பட்டது.

**தேசிய சிவப்புப் பட்டியல் இடல் செயற்றிட்டம்**

சுற்றாடல் அமைச்சின் உயிரியல் பல்வகைமை செயலகத்துடன் இணைந்து சர்வதேச சிவப்புப் பட்டியலிடல் நிகழ்ச்சிக்காக தாவர வகைகளை மதிப்பிடல் மற்றும் தேசிய சிவப்புத் தரவுப் புத்தகத்தை தயாரிப்பதற்கான வகைகளை மதிப்பிடல் ஆகிய பணிகளுக்கான தரவுகளைத் திரட்டவென இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. தற்போது அப்புத்தகம் பதிப்பிக்கத் தயாராக உள்ளது.

இவ்வருட தேசிய சிவப்புப் பட்டியலிடல் மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 34349 பதிவுகளும் 1250 வகைகளும் மற்றும் 48 வித்து மூடுயுழி குடும்பங்களும் மேலும் 5556 பதிவுகளும் 286 வகைகளும் 23 பன்னத் தாவர வகைகளும் மதிப்பிடப்பட்டன. தாவரக்கய அலுவலர்களும் தேசிய தாவரவியல் பூங்காக்களினதும் பல்கலைக் கழகங்களதும் உயிரியல் பல்வகைமை செயலகங்களதும் தாவரவியல் நிபுணர்களும் ஏனைய அமைப்பாளர்களும் 7 நிபுணர் குழுக் கூட்டங்களில் கலந்து கொண்டு வித்து மூடியுழிகள் மற்றும் பன்னத் தாவர வகைகளைச் சார்ந்த 84 குடும்பங்களுக்குரிய 2410 வகைகளை மதிப்பீடு செய்தனர்.






⮝ மாதிரி தயாரித்தல்

⮟ புதிய நூலக சேகரிப்பு

**தாவரவியல் தரவு உருவாக்கமும் அவற்றை கிடைக்கச் செய்தலும்**

குடும்பங்களில் பட்டியல்களை தொகுத்தல், பொதுப் பெயர் குறித்தல் ஆகிய தாவரக்கய மாதிரிகளை கிடைப்பிக்கச் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

தேசிய தாவரக்கயத்தில் டிஜிடல் தாவரக்கய சேமிப்பு ∴ அலகு ஒன்றை ஆரம்பிக்கும் முதற் பணியாக 200 மாதிரிகளும் 500 விளக்கப்படங்களும் 2000 அரிய மற்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள தாவர மாதிரிகளும் டிஜிடல் மயப்படுத்தப்பட்டன.

இலங்கையின் தாவரங்கள் என்ற திருத்தியமைக்கப்பட்ட புத்தகத்தில் மேலும் திருத்தங்களை செய்யும் பணி பூரணப்படுத்தப்பட்டு அந்நூலின் 8 அத்தியாயங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

பேராதனை அரச தாவரவியல் பூங்காவில் அரிய ∴ அச்சுறுத்தலுக்கு உட்பட்டுள்ள மற்றும் இலங்கைக்கே உரிய 10 தாவர வகைகள் பற்றிய விபரங்களை பதிந்து வைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு அது பற்றிய தரவுத் தளத்தை தயாரிக்கும் பொருட்டு இதுவரை 19 மாதங்கள் இப்பதிவு நடந்துள்ளது.

**தாவரக்கய மாதிரிகளையும் ஏனைய சேகரிப்புக்களையும் பராமரித்தல்**

தாவரக்கய மாதிரிகளையும் ஏனைய சேகரிப்புக்களையும் பராமரிப்பதற்கான வழமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

*பொதுப் பேணுகை*

16124 தாவரக்கய மாதிரிகள் பழுதுபார்க்கப்பட்டன. 220 மாதிரிகள் பூச்சுத்தாக்கத்திலிருந்து பாதுகாக்கப்படுவதற்கென சிகிச்சையளிக்கப்பட்டன. ( நஞ்சூட்டல்) 8436 மாதிரிகள் ஆழ்குளிரூட்டியில் இடப்பட்டன. 194 மாதிரிகள் குவிக்கப்பட்டன. 27 மாதிரிகள் மீள் குவிக்கப்பட்டன. 2846 வகை மூடிகள் இடப்பட்டன. 3761 அட்டைகள் இடப்பட்டன. 28726 மாதிரிகளும் 1031 புத்தகங்களும் சுத்திகரிக்கப்பட்டன. 756 மாதிரிகள் அழுத்தப்பட்டன. 4898 லேபல்கள் தட்டச்சு செய்யப்பட்டு இணைக்கப்பட்டன. புதிய சேகரிப்புக்கு புதிதாக 50 அறிவித்தல் பலகைகள் இடப்பட்டன.

**தாவரக்கயத்தின் பொதுப்பேணுகை புதுப்பித்தல் மற்றும் அதற்கான கொள்வனவுகள்**

தாவரக்கய மாதிரிகளை சர்வதேச தரத்தில் பேணுவதற்காக HAIER ஆழ்குளிரூட்டியொன்று கொள்வனவு செய்யப்பட்டது.

மாதிரிகளை நஞ்சூட்டுவதற்காக பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் உடைகளின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்பட்டது.

தாவரப் பெயரிடல் ஆய்வுகளில் சர்வதேச பரிமாற்ற நோக்கத்துக்காக உயர்தர டிஜிடல் படங்களை பெறும் நோக்கில் புகைப்படக் கருவிகளும் ஒளி விளக்கு உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டன.

பாரம்பரிய சேகரிப்பு கட்டிடத்தின் கூரைப் பழுது பார்த்தல் பணிகள் நிறைவு செய்யப்பட்டன.

**பணியாளர் விபரம்**

Mrs R.A.S.W.Ranasinghe
Research Officer
B.Sc.(Botany), M.Sc.

Mrs. N.P.T. Gunawardena
Agriculture monitoring officer
B.Sc. (Botany), M. Sc

Mrs. G.Fonseka
Programme Assistant
B.Sc.(Botany), M. Sc

Mrs Premani Karunarathne
Management Assistant
G.C.E.(A/L)

Mrs. S.A.Padmini
Research sub assistant
G.C.E.(0/L)

Mrs. I.A. Kumara Manike
Labor Grade 111 with G.C.E. (A.L.)

Mr. H.M.U. Weerasekera
Labor Grade 111 with Grade 8

Mr W.A.P.N. Kumarasinghe Contract Labor G.C.E.(A/L)

***இடமாற்றம் மற்றும் ஓய்வு பெறல்***

பிரதிப் பணிப்பாளர் கலாநிதி (திருமதி) ஏ.எம்.ஏ.எஸ். அத்தநாயக்க 2011 ஜுன் 28ம் திகதி அரச தாவரவியல் பூங்காவுக்கு இடமாற்றப்பட்டார்.

ஆய்வு உத்தியோகத்தர் ஆர்.ஏ.எஸ். ரனசிங்ஹ தனது பிரசவ விடுமுறையின் பின்னர் 2011 ஜுன் 13 ம் திகதி பிரிதிப் பணிப்பாளர் பதவியின் கடமைகளை பொறுப்பேற்றார்.

ஆய்வு துணை உதவியாளர் திருமதி எஸ்.ஏ. பத்மினி ஏப்ரல் 8 ம் திகதி ஓய்வு பெற்றார்.

# தாவரவியல் பூங்கா - ஹக்கல

ஹக்கல தாவரவியல் பூங்கா 1861 ல் இலங்கையில் சிங்கோனா பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்கும் பரீட்சித்துப் பார்ப்பதற்குமென ஆரம்பிக்கப்பட்டது. இப்பூங்காவானது இலங்கையின் மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் தேயிலைத் தோட்டங்களுக்கு இடையில் அமைந்துள்ளது. இது இலங்கையின் இரண்டாவது பெரிய தாவரவியல் பூங்காவாகும்.

கடல் மட்டத்திலிருந்து 1745 மீற்றர் உயரத்தில் 28 ஹெக்டயார் பரப்பில் ஹக்கல மலை நிழலின் கீழ் இது அமைந்துள்ளது. இப்பிரமாண்ட மலையானது இப்பூங்காவுக்கு பிண்ணனியில் 2200 மீற்றர் வரை உயர்ந்து வனச்சேகரிப்பை சூழ்ந்தமைந்துள்ளது. இப்பூங்கா நுவரெலியா பதுளை வீதியில் தென் கிழக்குத் திசையாக நுவரெலியா நகரிலிருந்து 9.5 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

இப்பூங்காவின் தாவரங்கள் துணை அயன வலயத்துக்குரியவையாகும். இங்கு உள்நாட்டு, மலைப் பிரதேச மற்றும் ஏனைய துணை அயன வலய நாடுகளிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட பல்வகைத் தாவரங்கள் ஒழுங்கு முறையாக நடப்பட்டிருக்கின்றன.




### பார்வையாளர்கள்

2011 ம் ஆண்டில் 510116 பேர் (500024 உள்நாட்டவர்களும், 10092 வெளிநாட்டவர்களும்) இப்பூங்காவை தரிசித்தனர். இது முன்னைய வருடத்தை விடஅதிகரித்த தொகையாகும்.

### வருமானம்

79555 வெளியக மற்றும் உள்ளக தாவரங்களும் 3903 விதைப் பெக்கட்டுகளும் 11349 பசுமைப் பூக்களும் இப்பூங்காவில் விற்பனை கூடத்தில் விற்கப்பட்டன. அத்தோடு 10029 பசுமை வெட்டுப் பூக்கள் உற்பத்தி செய்யப்பட்டு கொழும்பிலுள்ள சுவஹஸ் மல் விற்பனை நிலையத்துக்கு விற்பனைக்காக வழங்கப்பட்டன. இப்பூங்காவினுள் இவ்வருடம் 5544 கார்களும் 742 மோட்டார் சைக்கிள்களும் 8 சைக்கிள் வண்டிகளும் வருகை தந்தன. பின்வரும் வகைகளில் ரூபா 34513127.39 இலாபமாக பெறப்பட்டது.

| வகை | வருமானம் (ரூ) |
|---|---|
| பார்வையாளர்கள் | 29,752,890.09 |
| வாகன நுழைவு | 887,450.00 |
| தாவரங்கள் மற்றும் தொடர்புடைய பொருட்கள் விற்பனை | 3,517616.80 |
| பிரசுர விற்பனை | 5,385.00 |
| சுற்றுலா விடுதி | 305,489.00 |
| படமெடுத்தல் மற்றும் ஏனையவை | 44,296.00 |
| **மொத்தம்** | **34,513,127.39** |




▲ மாதாந்த பார்வையாளர் வருகை 2011

பாறைத் தோட்டம்



▼ மாதாந்த உள்நாட்டுப் பார்வையாளர் வருகை 2011



**உயிரிச் சேகரிப்பும் வெளிவாரிப் பேணுகையும்**

63017 வெளியகத் தாவரங்களும் 11509 உள்ளக தாவரங்களும் பூங்காவில் உற்பத்தி செய்யப்பட்டு அதன் உயிரிச் சேகரிப்பு மேம்படுத்தப்பட்டதோடு 10 புதிய வகைத் தாவரங்கள் நாற்று மேடைகளில் இணைக்கப்பட்டன. மலைப் பிரதேச மருத்துவத் தாவரங்கள் பற்றிய தரவுத் தளம் தயாரிக்கப்பட்டு 125 தாவரங்கள் பற்றிய விபரங்கள் இத்தரவுத் தளத்தில் சேர்ப்பிக்கப்பட்டன.

பூங்காவில் காணப்படும் 125 மாதிரிகள் பற்றிய விபரங்களை தற்போது உள்ள தரவுத் தளத்தில் இணைத்தல், 271 தாவரக்கய மாதிரிகளை துப்பரவு செய்தல், 55 மாதிரிகளை குவித்தல், என்பன மூலம் தாவரக்கய அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு தாவரக்கய சேமிப்பு முறையாக முகாமை செய்யப்பட்டது.



- பூந்தோட்டம்
- மரத்தோட்டம்
- ரோசாப் பூந்தோட்டம்





தேசிய தாவரக்கயத்தின் உதவியோடு இரண்டு களப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு 55 தாவர மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அவற்றில் 22 மாதிரிகள் அடையாளம் காணப்பட்டன. அத்தோடு சேகரிக்கப்பட்ட ஆபத்துக்குட்பட்டுள்ள ∴ அரிய தாவரங்கள் குறித்தும் பூங்காவில் இல்லாத தாவரங்கள் குறித்துமான வெளிவாரிப் பேணுகையும் மேற்கொள்ளப்பட்டது.

21250 தாவரங்கள் இப்பூங்காவில் நடப்பட்டு பூங்காவின் உயிரிச் சேகரிப்பும் அழகும் மேம்படுத்தப்பட்டன. அத்தோடு 55 மரங்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

851 தாவர லேபல்கள் பொருத்தப்பட்டன. கூடுதல் விபரங்கள் அடங்கிய லேபல்கள் வடிவமைக்கப்பட்டு தாவரங்களில் பொருத்தப்பட்டன. அத்தோடு அவ்வாறான 100 லேபல்கள்

திருத்தப்பட்டன. நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவில் விழக்கூடிய ஆபத்தை எதிர் நோக்கி இருந்த 170 மரங்கள் அடையாளம் காணப்பட்டு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

**கல்வி மற்றும் தகவல் வழங்குகை**

பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பல்வேறு குழுவினருக்கு அவர்களது வேண்டுகோளுக்கு ஏற்ப பூஞ்செடிச் செய்கை நில வடிவமைப்பு, ரோசா பயிர்ச் செய்கை மற்றும் உயிரியல் பல்வகைமை பேணுகை என்பன குறித்த கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

பின்வரும் பயிற்சி நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.

ஹொரன நேசர்ஸ் பியுடி கிரியேஸன்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த 9 பங்கேற்பாளர்களுக்கான நிகழ்ச்சி, ஹாவாஎலிய விவசாய திணைக்கள பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தைச் சேர்ந்த 32 பேருக்கு ஜேர்பரா வளர்ப்பு பற்றிய பயிற்சி இரண்டு மாணவர்களுக்கு தமது உயர்தர செயற்திட்டத்துக்காக ரோஸா மற்றும் அலங்காரத் தாவரங்கள் பயிர்ச்செய்கைகள் பற்றிய பயிற்சி சப்ரகமுவ பல்கலைக் கழக மாணவர் ஒருவருக்கான தாவர இனப்பெருக்கம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி, பெல் வெகர விவசாய பாடசாலையைச் சேர்ந்த 36 பயிலுனர்களுக்கு நில வடிவமைப்பு மற்றும் ரோஸா வளர்ப்பு பற்றிய பயிற்சி. மேலும் நுவரெலியா பிரதேசத்தில் பூச்செடிச் செய்கை பற்றிய பயிற்சி வகுப்புகள், உயர்தர மாணவர்களுக்கு வெட்டுப்பூக்கள் மற்றும் இலைகள் பற்றிய பயிற்சி





➢ பூங்காவில் பொது மக்கள்

➢ கல்வி நிகழ்ச்சியொன்று

நுவரெலியா மாவட்ட சுவஹஸ்மல் சங்கங்களைச் சார்ந்த பூவளர்ப்போர் 34 பேருக்கு பூச்செடிச் செய்கை பற்றிய செயலமர்வு ஒன்று நடாத்தப்பட்டது.

பேராதனை பல்கலைக் கழக மாணவருக்கான ரோஸா வளர்ப்புப் பயிற்சி மத்திய மாகாண விவசாய ஆசிரியர்கள் 41 பேருக்கு மத்திய மலை நாட்டுக்குப் பொருத்தமான நில

வடிவமைப்பு முறைகள், பூச்செடியியல் மற்றும் பசுமையிலைகள் வளர்ப்பு பற்றிய பயிற்சி ஆகியன வழங்கப்பட்டன.

கல்பாலம விவசாய பாடசாலையைச் சேர்ந்த 25 மாணவர்களுக்கு ரோசா மற்றும் காானேசன் வளர்ப்பு பற்றியும் 27 மாணவர்களுக்கு ஓக்கிட் மற்றும் பசுமையிலை வளர்ப்பு பற்றியும் 25 மாணவர்களுக்கு அந்தூரியம் மற்றும் ஜேபரா வளர்ப்பு பற்றியும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

மேலும் தியதலாவ இராணுவ முகாமைச் சேர்ந்த 112 பட்டதாரி மாணவர்களுக்கு பூங்காவின் வரலாறு மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றிய ஒரு விரிவுரை நடாத்தப்பட்டது. நகரப் பூங்காக்கள் பற்றி பொது மக்களுக்கும் நில வடிவமைப்பு பூங்காவியல் பற்றி மாத்தளை சிறுதானிய ஏற்றுமதி விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் 5 பேருக்கும் விரிவுரைகள் நடாத்தப்பட்டன.

- தாவர இல்லம் திருத்தியமைக்கப்பட்ட பின்னர்
- பொலி டனல்களில் ரோசா
- பாறைத் தோட்ட பாதை மேம்படுத்தல்

**அபிவிருத்தி நடவடிக்கைகள்**

கிளேவியா பகுதி, பாறைத் தோட்டம் போன்ற சில பகுதிகளில் பாதைகள் மேம்படுத்தப்பட்டு கொங்கிரீட் இடப்பட்டது. ரோஸா வளர்ப்புக்கு பொலிடனல்கள் நிர்மாணிக்கப்பட்டு 1500 ரோஸாச் செடிகள் நடப்பட்டன.

நிழல் இல்லங்கள், கழிவறைகள் போன்றன பழுது பார்க்கப்பட்டன. இவ்வருட நுவரெலியா பருவ காலத்தின் போது மார்ச் மாத நடுப்பகுதியிலிருந்து ஏப்ரல் மாத நிறைவு வரை இப்பூங்கா வெப்பகால வருடாந்த பூக்கள், ரோஸா மற்றும் ஓக்கிட்கள் மூலம் அழகு







பெற்று காணப்பட்டது. இப்பூங்கா நன்கு பேணப்பட்டு அதன் நில வடிவமைப்பு மேம்படுத்தப்பட்டது.

பூங்காவின் கழிவுகளை நிலைபேற்றுத் தன்மையுடன் உரமாக மீள் பயன்படுத்தவன சேதனப் பசளை தயாரிப்புப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது.

புதிய இயந்திரங்களும் உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டு பூங்காவில் பேணுகை மேம்படுத்தப்பட்டது.

**விஷேட அதிதிகளின் வருகை**

சிங்கப்பூர் பாராளுமன்றத்தின் முன்னால் செயலாளர் பூங்காவுக்கு விஜயம் செய்து அதன் பேணுகை குறித்து வியந்து பாராட்டினார்.

***2011 ஆம் ஆண்டில் இவ்வலகின் பணியாளர் விபரம்***

| | பதவி | அனுமதிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பூங்கா உதவியாளர் | 1 |
| 2. | முகாமைத்துவ உதவியாளர் சேவை | 2 |
| 3. | சுற்றுலா விடுதியாளர் | 2 |
| 4. | தோட்டக் கங்கானி | 2 |
| 5. | இரசாயண கூட துணை உதவியாளர் | 1 |
| 6. | உதவி கட்டண அறவீட்டாளர்கள் | 2 |
| 7. | சாரதி | 1 |
| 8. | ஒட்டுனர் | 1 |
| 9. | நிரந்தர தொழிலாளர் | 39 |
| 10. | ஒப்பந்த தொழிலாளர் | 13 |
| 11. | மேசன் | 1 |
| 12. | லேபல் எழுதுனர் | 1 |
| 13. | புல்வெட்டும் இயந்திர இயக்குனர் | 2 |
| 14. | களஞ்சியப் பொறுப்பாளர் | 1 |
| 15. | நாற்று மேடை ஊழியர் | 1 |
| | **மொத்தம்** | **70** |

***இடமாற்றம் மற்றும் ஓய்வு***

திரு. ஏ.பீ. மெத்தகொட பூங்கா உதவியாளர் அம்பாந்தோட்டை தாவரவியல் பூங்காவிலிருந்து 2011 ஜனவரி 8 ம் திகதி இங்கு இடமாற்றப்பட்டார்.

நிதி சேகரிப்பு உதவியாளர்களான திரு. எஸ்.கே. ஜயஸேகர மற்றும் திரு. என்.ஆர். திஸாநாயக்க ஆகியோர் இங்கிருந்து பேராதனை தாவரவியல் பூங்காவுக்கு 2011 நவம்பர் மாதம் 20ம் திகதி இடமாற்றப்பட்டனர்.

செல்வி ஏ.எம்.யூ.எஸ். குமாரி முகாமைத்துவ உதவியாளர் மாவட்ட செயலாளர் அலுவலகத்திலிருந்து இங்கு இடமாற்றம் பெற்று வந்தார்.

# கம்பஹா தாவரவியல் பூங்கா

கம்பஹா, ஹெனரத்கொடை தாவரவியல் பூங்கா 1876 ஆம் ஆண்டு றப்பர் பயிர்ச் செய்கையை இலங்கையில் ஊக்குவிக்கும் முகமாக ஆரம்பிக்கப்பட்டது. இது கம்பஹா நகரத்தில் இருந்து 2 கிலோ மீற்றர் தூரத்தில் கம்பஹா – மினுவாங்கொடை வீதியில் அமைந்துள்ளது. இது 43 ஏக்கர் பரப்பளவு கொண்டது. வருடாந்தம் 150000 க்கும் அதிகமான உள்நாட்டு, வெளிநாட்டு பார்வையாளர்கள் இங்கு வருகை தருகின்றனர்.

பிரதேசத்தின் உயிரியல் பல்வகைமையை பாதுகாக்கும் நோக்கிலான வெளிவாரிப் பேணுகை, பூச்செடியியல் மற்றும் நிலவடிவமைப்புக் கல்வி மற்றும் விரிவாக்க சேவைகள், தாவரவியல் தகவல் வழங்குகை பூச்செடியியல் மற்றும் திசு உருவாக்கம் பற்றிய ஆய்வுகள் மூலம் அலங்கார பூச்செடிச் செய்கையை ஊக்குவித்தல். மத மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மரங்களின் பேணுகை. விற்பனைக்கான தாவர உற்பத்தி, சிற்றளவிலான பூச்செடிச் செய்கையாளர்களது உற்பத்திகளை சந்தைப்படுத்தும் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் நோக்கிலான பூக்கண்காட்சிகளை ஏற்பாடு செய்தல் ஆகியன இப்பூங்காவினால் மேற்கொள்ளப்படுகின்றன.



**பார்வையாளர்கள்**

இவ்வருடம் 186,326 பேர் (186,117 உள்நாட்டு பார்வையாளர்களும் 209 வெளிநாட்டவர்களும்) இப்பூங்காவை தரிசித்தனர். இது முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்கதோர் அதிகரிப்பாகும்.

**வருமானம்**

இவ்வருடம் 15,432 வெளியக மற்றும் உள்ளக தாவரங்களும் மற்றும் ஏனைய தாவரப் பொருட்களும் விற்பனை செய்யப்பட்டன.

9468 மோட்டார் கார்களும் 12,206 மோட்டார் சைக்கிள்களும் 52 மிதி சைக்கிள்களும் இவ்வருடம் பூங்காவினுள் அனுமதிக்கப்பட்டன.


4942 பேர் இப்பூங்காவில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட மிதி வள்ளங்களில் பயணித்தனர்.


பின்வரும் வகைகளின் கீழ் இவ்வருட மொத்த வருமானமாக ரூபா 13, 231, 414.00 ஈட்டப்பட்டது.

| **வகை** | **வருமானம் (ரூபா)** |
|---|---|
| பார்வையாளர்கள் | 8,613,401.00 |
| வாகன நுழைவு | 2,336,950.00 |
| தாவர மற்றும் ஏனைய பொருட்களின் விற்பனை | 579,735.00 |
| பிரசுர விற்பனை | 11,715.00 |
| நில வாடகை | 528,000.00 |
| படப்பிடிப்பு மற்றும் ஏனையவை | 173,213 |
| வள்ளம் | 988,400.00 |
| **மொத்தம்** | 13,231,414.00 |



**பூங்காவின் பூக்கள் பகுதி**






**உயிரிச் சேகரிப்பை வளப்படுத்தல்**

46,700 வெளியக மற்றும் உள்ளக் தாவரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு பூங்காவின் உயிரிச் சேகரிப்பு வளப்படுத்தப்பட்டது.

அரிய மற்றும் எமது நாட்டுக்கே உரிய தாவரங்களை சேகரிக்கும் நோக்கில் 3 கள கண்டாய்தல் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் மூலம் 62 தாவர மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட அழிவுறும் ஆபத்துக்குட்பட்ட / அரிய தாவரங்கள் தொடர்பிலும் மற்றும் பூங்காவில் இல்லாத தாவரங்கள் தொடர்பிலும் வெளிவாரிப் பேணுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

களப் பயணங்களின் போது சேகரிக்கப்பட்ட 68 தாவரங்கள் மரத் தோட்டத்தில் சேர்க்கப்பட்டன. பூங்காவில் தற்போதைய தாவரச் சேமிப்புக்கள் நன்கு பேணப்பட்டன. 53 மரங்களின் இத்துப்போன மற்றும் உடைந்த கிளைகள் நீக்கப்பட்டு தண்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டது. இலங்கையின் பல்வேறு மதஸ்தலங்களின் தலைமைப் பிக்குமாரின் வேண்டுகோளுக்கிணங்க வரலாற்று மற்றும் சமய முக்கியத்துவம் வாய்ந்த 20 மரங்களுக்குச் சிகிச்சைளிக்கப்பட்டது

- ➢ மரத்தோட்டம்
- ➢ குளம்





பூங்காவின் உயிரிச் சேகரிப்பை மேம்படுத்தி தாவரங்கள் குறித்த விஞ்ஞான மற்றும் ஏனைய தகவல்களை பொது மக்களுக்கு வழங்கும் நோக்கில் 750 தாவர லேபல்களும் 5 விரிவான விளக்கங்களுடனான லேபல்களும் தயாரிக்கப்பட்டன.

**கல்வி மற்றும் தகவல் வழங்கல்**

| வகை | பயிலுனர்கள் |
|---|---|
| **நாற்று மேடை முகாமைத்துவம்** | 116 |
| **வீட்டுத் தோட்டம்** | 78 |
| **நில வடிவமைப்பு** | 141 |
| **தாவர நோய்கள்** | 35 |
| **தாவர மாதிரிகளை அடையாளம் காணல்** | 4 |
| **மொத்தம்** | **374** |

பூச்செடியியல் நில வடிவமைப்பு உயிரியல் பல்வகைமைப் பேணுகை என்பன குறித்து பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட அவை குறித்த கோரிக்கைகளை முன்வைத்த பலருக்கு கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

இப்பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் 344

சுய தொழிலில் ஈடுபட்டுள்ள 421 பேருக்கு அந்தூரியம் வளர்ப்பு பற்றிய ஒரு நாள் செயலமர்வுகள் 12 பேருக்கு தாவரப் பேணுகை, உயிரியல் பல்வகைமை மற்றும் அதனோடு தொடர்புடைய விடயங்கள் குறித்து 5 விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. பூச்செடியியல் குறித்த பாடசாலை செயற்றிட்டங்கள் மூன்றுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. 149 பேரின் பங்கேற்போடு வீட்டுத் தோட்டம் பற்றிய மூன்று செயலமர்வுக்ள நடாத்தப்பட்டன. மேலும் பின்வரும் ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.

அதற்கு மேலதிகமாக நிலவடிவமைப்பு குறித்து ஆயுதப் படை அதிகாரிகளுக்கான 6 மாத உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சிகள் இரண்டும் மேலும் 7 தனிநபர்களுக்கான அவ்வகையிலான 3 மாத பயிற்சி நிகழ்ச்சியொன்றும் நடாத்தப்பட்டன.

***ஆலோசனை நிகழ்ச்சிகள்***

“அழகிய கம்பஹா” நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபாட்டோடு பங்கேற்று நகரை அழகு படுத்துவதற்கும் அதன் நில வடிவமைப்பை மேம்படுத்துவதற்கும்

நடாத்தப்பட்டதோடு பிரதேசத்தின் தெரிவு செய்யப்பட்ட, சுய தொழிலில் ஈடுபடும் 65 பெண்களுக்கு அலங்கார தாவரங்கள் விநியோகிக்கப்பட்டன.

ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஹெனரத்கொடை நிலைய பேணுகை செயற்றிட்டம், மினுவாங்கொடை, ஜா எல மற்றும் மகர அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் தந்துகம் ஓயா செயற்றிட்டம், பிலிகுட்டுவ அபிவிருத்திச் செயற்றிட்டம் ஆகியன மேற் கொள்ளப்பட்டன.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய வளாகம், பிரதேச செயலாளர் அலுவலகங்கள், கம்பஹா, மினுவாங்கொடை, ஜா எல மற்றும் ஏக்கல விமானப்படை முகாம்கள், வேயங்கொடை பண்டாரனாயக்க கல்லூரி, நைவல உயர் தொழில் நுட்ப நிறுவனம், ஓரதொட்டை சுற்றாடல் வலயம், கம்பஹா யசோதரா மகளிர் வித்தியாலயம் ஆகியவற்றின் நிலவடிமைப்புச் செயற்றிட்டங்களுக்கு தொழில் நுட்ப உதவி வழங்கப்பட்டது.

பிரதேசத்தின் சுய தொழில் ஈடுபாடு கொண்ட பெண்களுக்கு பூச்செடியியல் குறித்த அவர்களது அறிவை மேம்படுத்தி தொழில் நுட்ப மற்றும் ஏனைய திறன்களை வளர்க்கும் நோக்கில் பல பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

**அபிவிருத்திப் பணிகள்**

நிலவடிவமைப்பையும் பாதைகளின் தரத்தினையும் மேம்படுத்தும் நோக்கில் பூங்காவின் உள்ளகப் பாதை வலையமைப்பு மேம்படுத்தப்பட்டது. கம்பஹா, ஜா எல பகுதியிலிருந்து பூங்காவினுள் நுழைவதற்கான புதிய நுழைவாயில் மேம்படுத்தப்பட்டு மண்ணிரப்பப்பட்டு இன்டலொக்ஸ் பரப்பப்பட்டதன் மூலம் வெளிச் செல்லும் வாயிலிலான நெரிசலை தவிர்க்க வழியேற்பட்டது.

பொலி டனல்களின் திருத்த வேலைகள் (30'x20'), பூச்சாடிகளை வைப்பதற்கான தள நிர்மாணம் என்பன அமைக்கப்பட்டதோடு தாவரங்களின் சிறந்த முகாமைத்துவத்துக்கென நிழல் இல்லம் ஒன்றும் அமைக்கப்பட்டது. பூங்காவின் உணவகமாக முன்னர் பயன்படுத்தப்பட்ட கட்டிடத்தை கல்வி நிலையமாக மாற்றி பயிலுனர்களுக்கு கூடுதல் வசதிகளை அளிக்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. அவ்வாறே மரக்குடிலின் கைப்பிடிகளின் திருத்த வேலைகளும் நிறைவு செய்யப்பட்டன.



கழிவகத் தொகுதி பழுது பார்க்கப்பட்டு அதனைச் சுற்றிலும் அழகிய நில வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.

பூங்காவை அழகு படுத்தும் பணியை செயற்றிறன் மிக்கதாக முகாமை செய்யும் நோக்கில் புதிய உபகரணங்களும், இயந்திரங்களும், கருவிகளும் கொள்வனவு செய்யப்பட்டன.

- ⮝ புதிய நுழைவாயில் அபிவிருத்தி
- ➢ பயிற்சி நிகழ்ச்சியொன்று
- ⮟ பிரதேச அபிவிருத்திக்கான ஆலோசனை செயற்திட்டம்
- ⮟➢ எல்லைச் சுவரை மேம்படுத்துதல்







**பணியாளர் விபரம்**

***2012 வரையான பணியாளர்கள்***

| | பதவி | பணியாளர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பூங்கா பொறுப்பதிகாரி | 01 |
| 2. | ஆய்வு உத்தியோகத்தர் | 01 |
| 3. | விவசாய ஆலோசகர் | 06 |
| 4. | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (விவசாயம்) | 06 |
| 5. | ஆய்வு உதவியாளர் | 01 |
| 6. | பொது முகாமைத்துவ உதவியாளர்கள் | 05 |
| 7. | உதவிக் கட்டண அறவீட்டாளர்கள் | 01 |
| 8. | சாரதி | 01 |
| 9. | நானா வித ஊழியர் | 01 |
| 10. | டிரக்டர் இயக்குனர் | 01 |
| 11. | புல் வெட்டும் இயந்திர இயக்குனர் | 02 |
| 12. | ஒட்டுனர் | 01 |
| 13. | நாற்று மேடையாளர் | 01 |
| 14. | நிரந்தர தொழிலாளி | 20 |
| 15. | ஒப்பந்தத் தொழிலாளி | 19 |
| | **மொத்தம்** | **67** |

***இடமாற்றம் மற்றும் ஓய்வு***

செல்வி ஜே.எம்.டீ. குமாரி முகாமைத்துவ உதவியாளர் இப்பூங்காவிலிருந்து பேராதனை தலைமையகத்துக்கு இடமாற்றப்பட்டார்.

செல்வி சீ.எஸ். தேனுவர முகாமைத்துவ உதவியாளர் பொலிஸ் தலைமையகத்திலிருந்து இப்பூங்காவுக்கு இடமாற்றப்பட்டார்.

செல்வி ஆர்.எம். டெக்ஸிலா நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் கிழக்கு மாகாண ஆளுனர் அலுவலகத்திலிருந்து இப்பூங்காவிற்கு இடமாற்றப்பட்டார்.

திரு. எம்.பீ. பிரியந்த முதுகல பூங்கா தொழிலாளர் அலரி மாளிகை பூங்கா அலுவலகத்திலிருந்து இப்பூங்காவிற்கு இடமாற்றப்பட்டார்.

## மூலிகைத் தாவரப் பூங்கா – கனேவத்த

குருநானல நகரிலிருந்து 15 மைல்களுக்கு அப்பால் இது அமைந்துள்ளது. இடை வலயத்தில் அமைந்திருப்பதால் மூலிகைத் தாவரங்களை பேரளவில் வளர்ப்பதற்கு பொருத்தமான இடமாக இது காணப்படுகிறது. 52 ஏக்கர் கொண்ட இதன் அரை வாசி தென்னை மரங்களையும் 22 ஏக்கர் நிலம் மூலிகைத் தாவரங்களையும் கொண்டிருக்கிறது.

இலகுவில் காணக்கிடைக்காத அரிய வகைகளை பாதுகாப்பதும் மூலிகைத் தாவரங்களை முறையாக நடுவதும் அரிய வகைகளை அவதானிப்பதும் இப்பூங்காவின் குறிக்கோள்களாகும்.



**பணிகள்**

பூங்கா ஆரோக்கியமாக பேணப்பட்டதோடு காணி மேம்படுத்தல்கள் வீதி அபிவிருத்திகள் கட்டிட நிர்மாணம் ஆகியனவும் மேற்கொள்ளப்பட்டு பூங்கா மேம்படுத்தப்பட்டதோடு கூடுதல் பார்வையாளர்களை கவர்ந்திழுப்பதற்கும் அதனூடு மூலிகைத் தாவரங்களின் பெறுமதியை அவர்களுக்கு உணர்த்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வு நோக்கங்களுக்காக மாணவர் பூங்கா அமைக்கப்பட்டதோடு நிலத் தயாரிப்பு நடவடிக்கைகளும் தாவர நடுகைப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

உள்ளக வீதிகள் மேம்படுத்தப்பட்டதோடு வலையில்லம் ஒன்றும், தாவர இல்லம் ஒன்றும் அமைக்கப்பட்டன.

அதனூடு பூங்காவின் பயிரிடல் நிகழ்ச்சித் திட்டங்களை சிறந்த முறையில் முகாமை செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

பூங்காவின் பெறுமதிமிக்க மரங்களை பாதுகாக்கும் நோக்கில் எல்லை வேலி நிர்மாணிக்கப்பட்டதோடு பழைய பணியாளர் விடுதியும் புதுப்பிக்கப்பட்டது.

இஞ்சி *(Zingiber officinale)*, அரத்தை (*Alpinia calcarata)* ஆகிய தாவரங்கள் பயிரிடப்பட்டதோடு ¾ ஏக்கர் நிலத்தில் இஞ்சி நடப்பட்டது. படரும் செடிகளின் புதிய தொகுதியொன்று சேர்க்கப்பட்டு தற்போதைய சேகரிப்பு மேம்படுத்தப்பட்டது.

மருத்துவத் தாவரங்களை சேகரிக்கும் நோக்கில் அருங்கல்ல வனத்தில் களப் பயணம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

**தாவர உற்பத்தியும் விற்பனையும்**

17,357 தாவரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு அவற்றில் 12385 தாவரங்கள் இவ்வருடம் விற்பனை செய்யப்பட்டன. அத்தோடு 16658 தேங்காய்களும் விற்கப்பட்டன.

விற்பனைகள் மூலம் இவ்வருடம் ரூபா 705,204 வருமானமாக ஈட்டப்பட்டது.

மூலிகைத் தாவரங்கள் பற்றி அறிந்து கொள்வதற்கும் தாவரங்களையும் மருந்துகளையும் கொள்வனவு செய்வதற்கென 900 பேர் பூங்காவுக்கு வருகை தந்தனர்.

ஒரு செயற்றிட்டத்துக்காக ஜப்பானிய மாணவர்கள் 8 பேர் மருத்துவ தாவரங்கள் பற்றிய ஆய்வினை இப்பூங்காவில் மேற்கொண்டனர்.



- படரும் தாவரச் சேகரிப்பு
- எல்லை வேலி



**பணியாளர் விபரம்**

***2011 வரையான பணியாளர் விபரம்***

| | பதவி | பணியாளர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | விவசாய ஆலோசகர் | 01 |
| 2. | பூங்கா உதவியாளர் | 01 |
| 3. | களஞ்சிய காப்பாளர் | 01 |
| 4. | நிரந்தர தொழிலாளர் | 07 |
| 5. | ஒப்பந்தத் தொழிலாளர் | 06 |
| | **மொத்தம்** | **16** |

***இடமாற்றமும் ஓய்வும்***

புல் வெட்டும் இயந்திர இயக்குனர் ஒருவர் பேராதனை அரச தாவரவியல் பூங்காவுக்கு இடமாற்றப்பட்டார்.

# உலர்வலய தாவரவியல் பூங்கா – அம்பாந்தோட்டை

இப்பூங்கா 130 வருடங்களின் பின்னர் இலங்கையின் நிபுணர்களால் வடிவமைக்கப்பட்ட முதலாவது தாவரவியல் பூங்காவாகும். 300 ஏக்கர் பரப்பு கொண்ட இது இலங்கையின் தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மிரிஜ்ஜவிலயில் அமைந்துள்ளது. இதன் அபிவிருத்திப் பணிகள் 2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

பல்வேறு மனித நடவடிக்கைகள் காரணமாக உலர் வலய வன தாவரங்கள் மறையத் தொடங்கி இருக்கின்றன. குறிப்பாக அம்பாந்தோட்டை பிரதேசத்தில் 98 வீதமான வனத் தாவரங்கள் கடந்த 30 வருடங்களில் காணாமல் போயிருக்கின்றன. இப்புதிய பூங்காவின் பிரதான குறிக்கோள் உலர் மற்றும் அதி உலர் வலய தாவரங்களை குறுங்காலத்திலும் நீண்ட காலத்திலும் வெளிவாரி முறைமையின் கீழ் பேணிப் பாதுகாப்பதும் உலர் வலயத்தின் குறைவாக அறியப்பட்ட மற்றும் குறை பயன்பாடுடைய தாவரங்களைப் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வதும் மருந்து உற்பத்தியை உஊக்குவிர்ாது பிரசேத்தின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதும் உலர் வலய தாவரவியல் மற்றும் பூச்செடியியல் குறித்த அறிவு மற்றும் பயிற்சியை ஊக்குவிப்பதும் ஆகும்.



**2011 இல் மேற்கொள்ளப்பட்ட பணிகள்**

உலர் மற்றும் அதி உலர் வலய தாவரங்களை பாதுகாப்பதற்கென ஆரம்பிக்கப்பட்ட மெரிஜ்ஜவில உலர் வலய தாவரவியல் பூங்காவின் அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு நிறைவை அண்மித்து இருக்கின்றன.

அலுவலர்கள் மற்றும் ஏனைய பயிலுனர்கள் தூரப்பிரதேசத்திலிருந்து வரும் குழுக்கள் ஆகியோருக்கு வசதி செய்து கொடுக்கும் வகையில் விடுதி ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை பொது மக்களுக்கான குடிநீர் வழங்கல் ஏற்பாடுகளை செய்வதற்கான பணிகளை மேற்கொண்டது. நுழைவாயில் கட்டிடத் தொகுதி நுழைவுச் சீட்டுக் கரும பீடம் கழிவறைகளுடனான நான்கு நிழல் இல்லங்கள் ஆகியவற்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்டது.

நுழைவாயில் கட்டிடத் தொகுதியைச் சுற்றி அழகிய வேலி ஒன்றும் இருக்கைகளும் வடிவமைக்கப்பட்டன. உள்ளக வீதிகள் அமைக்கப்பட்டு பூங்காவின் நில அலங்காரம் மேம்படுத்தப்பட்டது.

புதிய பகுதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு புதிய நில அலங்காரங்கள் ஏற்படுத்தப்பட்டன. முறையான பூங்கா, அடிப்பாதைகள், புதர் தோட்டம், கல்லித் தாவரச் சேகரிப்பு என்பன ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இப்பூங்கா பொது மக்களுக்காக திறக்கப்பட்ட பின்னர் 300 நேரடி வேலைவாய்ப்புகளும் 1000 மறைமுக வேலை வாய்ப்புகளும் பூச்செடியியல் துறையிலான சுய தொழில் வாய்ப்புகளும் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.










- ➤ பூந்தோட்டம்
- ⮜ விழிப்பூட்டல் நிகழ்ச்சியொன்று
- ⮜⮟ அழகாகப் பேணப்படும் புதர் வேலிகள்
- ⮟ புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வாசஸ்தலம்

பூச்செடியியல் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்டு பிரதேசத்தின் பூ வளர்ப்பாளர்களுக்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டதோடு பூங்காவின் உயிரிச் சேகரிப்பும் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் மூலம் மேம்படுத்தபட்டது.





⮝ மரத் தோட்டம்

⮜ ஓகிட் சேகரிப்பு

⮟ போகன்விலா சேகரிப்பு







உள்ளக வீதிகள் மற்றும் நிலவடிவமைப்பு அபிவிருத்தி

**பணியாளர் விபரம்**

***2011 இல் அலகின் பணியாளர்கள்***

| | **பதவி** | **பணியாளர்கள்** |
|---|---|---|
| 1. | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (விவசாயம்) | 2 |
| 2. | விவசாய ஆலோசகர் | 1 |
| 3. | முகாமைத்துவ உதவியாளர் | 3 |
| 4. | சாரதி | 1 |
| 5. | பூங்கா மேற்பார்வையாளர் | 1 |
| 6. | ஒப்பந்த ஊழியர்கள் | 70 |
| | **மொத்தம்** | **78** |

# ஈர வலய தாவரவியல் பூங்கா - அவிசாவலை

மேல் மாகாணத்தில் அவிசாவலையில் இலுக்கோவிட்ட பகுதியில் அமைந்துள்ள இப்பூங்காவானது தற்போது 62 ஏக்கர் பரப்பைக் கொண்டுள்ளது. அச்சுறுத்துலுக்கு உள்ளாகியுள்ள மற்றும் அழிவுறும் ஆபத்துக்கு உட்பட முடியுமான இப்பிரதேசத்தின் தாவரங்கள் இங்கு திருப்திகரமாக பாதுகாக்கப்படும். அத்தோடு பிரதேசத்தின் சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும் இது உதவும். மேலும் நாட்டில் வேகமாக வளரும் பூச்செடியியல் தொழிலையும் ஊக்குவிக்கும். தாவரவியல் மற்றும் சூழலியல் மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்குமான ஒரு இரசாயண கூடமாக இது தொழிற்படுகிறது. அறிவியல் ஆராய்ச்சிக்கான ஒரு பிரதேசத்தையும் குடும்பங்களுக்கான ஓய்வு பெறும் பகுதிகளையும் இது கொண்டிருக்கின்றது. இப்பூங்காவின் பிரதான குறிக்கோள் ஈரவலய தாழ்நில தாவரங்களை வெளிவாரிப் பேணுனை முறைமையின் கீழ் பாதுகாப்பதும் ஈரவலய நில வடிவமைப்பை மேம்படுத்தி பொருளாதார அழகியல் மற்றும் சூழலியல் பெறுமானம் கொண்ட தாவர வகைகளை காட்சிப்படுத்துவதுமாகும்.







- உள்ளக வீதிப் புனரமைப்பு
- புல்வெளி மேம்படுத்துகை
- கும்புக் தோட்டம்
- ஓகிட்





**2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

இப்பூங்காவின் நிர்மாணப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு நிறைவை எட்டியுள்ளன.

காட்சி அலங்காரம், நிலத்தின் நிலைபேற்றுப் பயன்பாடு என்பவற்றை மேம்படுத்தும் வகையில் நில வடிவமைப்பு மேற்கொள்ளப்பட்டது.

நுழைவாயில் கட்டிடத் தொகுதி வாகனத் தரிப்பிடம் ஆகியவற்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்டது.

மரத்தோட்ட நிர்மாணம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது. அதற்காக 25 ஏக்கர் நிலம் தயார்படுத்தப்பட்டுள்ளது. உள்ளக வீதிகள் மேம்படுத்தப்பட்டன. புற்தரை 5 ஏக்கர்களாக விரிவு படுத்தப்பட்டது.

குபுக் மர தோட்டத்தை அண்மித்த வகையில் ஒரு குளம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மேலும் பூச்செடியியல் அபிவிருத்திப் பணிகளும் மேம்படுத்தப்பட்டு பிரதேசத்தின் பூ வளர்ப்போருக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

அந்தூரியம் மற்றும் ஓக்கிட்கள் நடப்பட்ட பொலி டனல்கள் நல்ல முறையில் பேணப்பட்டு இவ்வருடத்தினுள் 600 புதிய வகை ஓக்கிட்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இப்பூங்காவின் மூலம் 100 நேரடி வேலை வாய்ப்புகளும் 1000 மறைமுக வேலை வாய்ப்புகளும் இன்னும் பல சுய தொழில் வாய்ப்புக்களும் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



குள அபிவிருத்திப் பணிகள்



**பணியாளர் விபரம்**

***2011 இல் அலகின் பணியாளர்கள் விபரம்***

| | பதவி | பணியாளர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (விவசாயம்) | 1 |
| 2. | விவசாய ஆலோசகர் | 1 |
| 3. | ஒப்பந்த தொழிலாளர்கள் | 13 |
| | **மொத்தம்** | **15** |

## அதிமேதகு ஜனாதிபதி மற்றும் மாண்புமிகு பிரதமர் ஆகியோரது வாசஸ்தலப் பூங்காக்கள்

அதிமேதகு ஜனாதிபதி அவர்களது அலரி மாளிகை, கொழும்பு 01, கண்டி, நுவரெலியா, அநுராதபுரம் ஆகிய பிரதேச வாசஸ்தலங்களது பூங்காக்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களது கொழும்பு மற்றும் நுவரெலியா வாசஸ்தலங்களது பூங்காக்கள் சிறந்த முறையில் பேணப்பட்டன.



இவற்றில் பல அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. உள்ளக வீதிகள் மேம்படுத்தப்பட்டு புதிய கட்டமைப்புக்கள் சேர்க்கப்பட்டன. கண்டி ஜனாதிபதி இல்லத்தில் புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதியில் நில வடிவமைப்பு மேற்கொள்ளப்பட்டு மூலிகைத் தாவரங்கள் பகுதி ஒன்று அமைக்கப்பட்டது.

- மாண்புமிகு பிரதமர் அவர்களது வாசஸ்தலப் பூங்கா
- அலரி மாளிகையில் வளர்க்கப்படும் மரக்கறி வகைகள்



பூவினாலான எல்லைகள், பூப்பாத்திகள் மற்றும் மரக்கரிப் பாத்திகள் மூலம் பூங்காக்கள் அலங்கரிக்கப்பட்டன. உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. பூ மறக்கரிகள் மற்றும் பழ வகை தாவர நாற்று மேடைகள் வெற்றிகரமாக பேணப்பட்டு வாசஸ்தலங்களின் தேவைகளுக்கான பூக்களும் மரக்கறிகளும் பழங்களும் அவற்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டன. மாண்புமிகு பிரதமரின் கொழும்பு இல்லத்தில் தாவரங்களுக்கு லேபல் இடும் பணி நிறைவு பெற்றது.



# பொது நலவாய போர் சமாதிகள்

கண்டி, ஜாவத்த, பொரளை மற்றும் திருகோணமலை பொது நலவாய போர் சமாதிகள் சிறந்த முறையில் பேணப்பட்டன. ஜாவத்த போர் சமாதி சோஸியா புற்கள் நடப்பட்டு மேம்படுத்தப்பட்டது. பொரள்ளை சமாதியில் வைக்கப்பட்டிருந்த அடையாளக் கற்கள் மீளமைக்கப்பட்டன.

கண்டி போர் சமாதியைச் சுற்றி வேலி அமைக்கப்பட்டது.

கண்டி போர் சமாதியானது மத்திய மாகாண ஆளுனர் அலுவலகத்தால் நடாத்தப்பட்ட நகரங்களுக்கான பூங்காக்கள் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.



- கண்டி போர் சமாதி
- கண்டி போர் சமாதியில் வேலியமைத்தல்
- கண்டி போர் சமாதிக்குக் கிடைத்த வெற்றிக் கேடயம்









- திருகோணமலை போர் சமாதி
- ஜாவத்த போர் சமாதி

**2011ம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள்**


1. Wjesundara, D.S.A. (2011). The peak wilderness. Pages 107-121 in Sarala Fernando editor. Sri Pada – Peak Heritage of Lanka. Sarala Fernando and Luxshmanan Nadaraja Publishers, Colombo. 227 pp.

2. Wijesundara, D.S.A. (2011) Anti-inflammatory Plants Used in Sri Lanka. Proceedings of IFS – AFASSA International Symposium on Natural Products and their Applications in Health and Agriculture. Institute of Fundamental studies, Kandy.

3. Amaras inghe, A. P. P. R. & D. S. A. Wi jesundara (2011) A new species of *Rhinacanthus* (Acanthaceae) from Sri Lanka. Edinburgh Journal of Botany 68 (3): 333–337

4. Miththapala, S., S. Wijesundara and J. galappatti (2011). Flowering plants commonly encountered in Sri Lankam habitats. National Trust: Colombo. 216 pp.

5. B. Marambe, P. Silva, S. Ranwala, J. Gunawardena, D. Weerakoon, S. Wijesundara, L. Manawadu, N. Atapattu, and M. Kurukulasuriya (2011) Invasive alien fauna in Sri Lanka: National list, impacts and regulatory framework. In: Veitch, C. R.; Clout, M. N. and Towns, D. R. (eds.).. Island invasives: eradication and management. IUCN, Gland, Switzerland. 445-450

6. Mikhail S. Romanov, Alexey V. F. Ch. Bobrov, D. Siril A. Wijesundara and Ekaterina S. Romanova. (2011) Pericarp development and fruit structure in borassoid palms (Arecaceae–Coryphoideae–Borasseae) Annals of Botany (first published online August 10, 2011 doi:10.1093/aob/mcr148)

7. R. H. G. Ranil, D. K. N. G. Pushpakumara, T. Janssen, C. R. Fraser-Jenkins and D. S. A. Wijesundara (2011) Conservation Priorities for Tree Ferns (Cyatheaceae) in Sri Lanka. Taiwania, 56(3): 201-209.


பூச்செடியியல் குறித்த பின்வரும் ஆய்வுக் கட்டுரைகள் துறை சார்ந்தோரின் பாவனைக்கு வழங்கப்பட்டது.

1. Investigation of a Suitable Growing Medium and Fertilizer Package for *Dracaena godseffiana L. cv* “Florida Beauty” (C. H Sapumanage, R. A. S. Perera and S. E Peiris)
2. Effect of BAP & IAA on Sucker Formation of *Chlorophytum comosum* (T.M.H.D. Tennekoon, S. E.Peris, S. A. Krishnarajah)
3. Selection of Suitable Growing Media for Growth of Commercial Dendrobium (W.M.D.N. Warigajeshta, W.M.D.E.R. Andradi, S.A Krishnarajah and D.S.A. Wijesundara)
4. Effect of $GA_3$ (Gibberellic acid) in combination with BAP (Benzyle Adenine Purine) on lateral shoot induction of topped *Anthurium andraeanum* in vivo (G. R. C. N. K. Godigamuwa, P. K. Dissanayake and S. A. Krishnarajah)
5. Effect of BAP (Benzyle amino Purine) and IAA (Indole acetic acid) on the growth of *Ophiophogan Japonicus* (ornamental foliage) (H. E. Herath, S. A. Krishnarajah and J. W. Damunupola)

**2012 ம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்டுள்ள பணிகள்**

| மகிந்த சிந்தனை வேலைத்திட்டம் | திட்டமிடப்பட்டுள்ள பணிகள் |
|---|---|
| **சூழலியல் பாதுகாப்பு மற்றும் சூழல் நட்பு சுற்றுலாத்துறை ஊக்குவிப்புக்கான நிலையானதோர் கொள்கை** | தாழ் நில உலர் வலய தாவரங்களின் பேணுகைக்கென ஆரம்பிக்கப்பட்ட மிரிஜ்ஜவில தாவரவியல் பூங்காவின் அபிவிருத்திப் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்தல்.<br>1. பிரதான நுழைவாயில் கட்டிடத் தொகுதி மற்றும் வாகனத் தரிப்பிடம், நிழல் இல்லங்கள் ஆகியவற்றின் நிர்மாணம் மற்றும் குடிநீர் வசதிகளை ஏற்படுத்துதல்.<br>2. வீதி வலையமைப்பை அபிவிருத்தி செய்தல்<br>3. பிரதேச பூ வளர்ப்போருக்கு வசதி செய்யும் வகையில் பூச்செடிச் செய்கைப் பிரிவுக்கான நாற்றுமேடைகளை அபிவிருத்தி செய்தலும் பயிற்சிகளை வழங்கலும்<br>4. தாவரப் பயிரிடல் மற்றும் தாவரப் பேணுகை<br>5. நில வடிவமைப்பு அபிவிருத்தி<br><br>தாழ்நில ஈரவலய தாவரங்களின் பேணுகைக்கென ஆரம்பிக்கப்பட்ட அவிசாவளை தாவரவியல் பூங்காவின் அபிவிருத்திப் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்தல்.<br>1. பிரதான நுழைவாயில் கட்டிடத் தொகுதி மற்றும் பார்வையாளர் மத்திய நிலைய நிர்மாணம்<br>2. உள்ளக வீதி அபிவிருத்தி<br>3. பூங்காவின் நிலவடிவமைப்பை மேம்படுத்தும் பொருட்டு நில அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்<br>4. பயிரிடல நிகழ்ச்சிகள் மூலம் உயிரிச் சேகரிப்பை மேம்படுத்துதல்<br>5. பிரதேச பூ வளர்ப்போருக்கு வசதி செய்யும் வகையில் பூச்செடிச் செய்கையை அபிவிருத்தி செய்தல் |
| **உயிரியல் பல்வகைமை பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்** | 1. தாழ் நிலத் தாவரங்கள் பற்றிய ஆய்வுகளை தொடர்ந்து முன்னெடுத்தல்<br>2. இலங்கையின் தாவரங்கள் பற்றிய மீளாய்வு<br>3. இலங்கையின் அழிவுறும் அச்சுறுத்தலுக்குட்பட்டுள்ள தாவரங்கள் பற்றிய சிவப்புத் தரவுப் புத்தகத்தை வெளியிடல்<br>4. இலங்கை தாவரங்களின் வெளிவாரிப் பேணுகை<br>5. இஞ்சி, அரத்தை போன்ற மருத்துவத் தாவரச் சேமிப்பை மேம்படுத்தலும் வர்த்தக நோக்கில் உற்பத்தி செய்தலும்.<br>6. களக் கண்டாய்வுகள், தாவர மாதிரிச் சேகரிப்பு, குறிப்பாக உலர் மற்றும் ஈர வலய அழிவுறும் அச்சுறுத்தலுக்குட்பட்டுள்ள தாவரங்களின் பேணுகை பற்றிய தாவரவியல் கணக்கெடுப்புக்களை மேற்கொள்ளல்<br>7. தாவர வகைப்படுத்தல், பல்வகைமை |

| | |
|---|---|
| | பற்றிய விஞ்ஞான ஆய்வுகளை மேற்கொள்ளல்.<br>8. வரலாற்று மற்றும் மத முக்கியத்துவம் வாய்ந்த மரங்களை பாதுகாக்கும் பணியை முன்னெடுத்தல்<br>9. ஒவ்வொரு தாவரவியல் பூங்காவிலிருந்தும் குறைந்தது 10 களப் பயணங்களை மேற்கொள்ளல்.<br>10. தாவரவியல் கூட மாதிரிகளை கணணி மயப்படுத்துதல்<br>11. இலங்கையின் தாவரங்கள் குறித்த உடற்கூறியல் ஆய்வு<br>12. இலங்கையின் அரிய மற்றும் அழிவுறும் அச்சுறுத்தலுக்குட்பட்டுள்ள தாவரங்களின் நுண் தாவரங்களை உருவாக்குதல் பற்றிய ஆய்வுகளை ஆரம்பித்தல் |
| **பூச்செடிச் செய்கை விவசாயிகள் தொழில் நுட்பம் மற்றும் ஏனைய தேர்ச்சிகள் மூலம் பலப்படுத்தப்படுவர்.** | 1. பூச்செடிச் செய்கை அபிவிருத்தி தொடர்பில் உரிய ஆய்வகளை நடாத்துதல்<br>2. பூச்செடிச்செய்கை அபிவிருத்தி தொடர்பிலான பிரதேச பூ வளர்ப்போரது இயலுமையை மேம்படுத்த பயிற்சி நிகழச்சிகளை நடாத்துதல்<br>3. பூ வளர்ப்போரது சந்தைப்படுத்தல் இயலுமையை மேம்படுத்த கண்காட்சிகளை ஏற்பாடு செய்தல்.<br>4. பூ வளர்ப்போருக்கு புதிய வகைகளைச் சார்ந்த உயர் ரக தாய்த் தாவரங்களை வழங்குதலும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை அறிமுகப்படுத்தலும்.<br>5. ‘‘சுவஹஸ் மல்’’பூ வளர்ப்போரது நாற்றுமேடைகளைத் தரிசித்து ஆலோசனை வழங்குதல்<br>6. பூச்செடிச் செய்கை மற்றும் சூழலியல் பாதுகாப்புத் தொடர்பில், பூங்காக்களின் உள்ளேயும் வெளியேயும் கண்காட்சிகளை நடாத்துதல்<br>7. பூச்செடிச் செய்கை மற்றும் நில வடிவமைப்பு பூங்காவியல் தொடர்பில் பிரசுரங்களை வெளியிடல், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்<br>8. பூச்செடிச் செய்கை விவசாய சங்கங்களை அமைப்பதினூடு அத்துறைசார் விவசாயிகளை ஒருங்கிணைத்தல்.<br>9. நாட்டின் பூச்செடிச் செய்கை தொழில் துறையை மேம்படுத்த ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை நடாத்துதல்.<br>10. கொழும்பில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமொன்றில் வெட்டுப் பூ விற்பனை நிலையமொன்றை உருவாக்கல்.<br>11. தாவர வகைப்படுத்தல், பேணுகை, உயிரியல் பல்வகைமை போன்றன குறித்து கல்வி / பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல் |

| | |
|---|---|
| **அலங்கார தாவரங்கள் பற்றிய நீண்ட கால மற்றும் குறுங்கால ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல்** | 1. தொழிற் துறையுடன் இணைந்து தேசிய மட்டத்தில் பூச்செடிச் செய்கை இயலுமையுடனான வனத் தாவர வகைகளைக் கண்டுபிடித்தல், அவற்றை சந்தைக்கு அறிமுகப் படுத்துதல்<br>2. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட தாவரங்கள், பொதுவாகப் பயிரிடப்படும் அலங்காரத் தாவரங்கள் குறித்து விவசாயவியல் அபிவிருத்தி ஆய்வுகளைச் செய்தல்<br>3. அறுவடைக்கு முந்திய மற்றும் பிந்திய தொழில் நுட்பங்கள் குறித்து ஆய்வு செய்தல்<br>4. திசு உருவாக்கம் மற்றும் உயிரியல் தொழில் நுட்பம் குறித்த ஆய்வுகளைச் செய்தல்.<br>5. பூச்செடிச் செய்கை இயலுமையுடனான நீர்த்தாவரங்கள குறித்த ஆய்வுகளைச் செய்தல்.<br>6. பீடை மற்றும் நோய் பற்றிய ஆய்வு<br>7. பூ உள்ளீர்ப்பு நுட்பங்கள் பற்றிய ஆய்வு |
| **வாழ்வாதார தேர்ச்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படும்.** | 1. பூச்செடிச் செய்கை மற்றும் தாவரப் பேணுகை குறித்த3 மாத, ஒரு வருட, இரு வருட கற்கை நெறிகளை நடாத்துதல்.<br>2. பூச்செடிச் செய்கை, அலங்கார தாவரவியல் மற்றும் தாவரப் பேணுகை குறித்த ஆலோசனை சேவைகளை வழங்குதல். |